# தமிழர் வாழ்வில் தமிழ்

தொகுப்பாசிரியர்
வே. பரமநாதபிள்ளை

குன்றக்குடி அடிகளார், கி.ஆ.பெ.விசுவநாதம், ஔவை துரைசாமிப்பிள்ளை, மு.வ, மா. இராசமாணிக்கம், பாரதியார், பாரதிதாசன்
ஆகியோரின் கருத்தோவியங்கள்

வெளியீடு
நொச்சித் தமிழ்ச் சங்கம்

301.2
தமிழ
SL/PR

# தமிழர் வாழ்வில் தமிழ்

எங்கும் எதிலும் தமிழ் வளர்ச்சிக்கான
கட்டுரைத் தொகுப்பு

வெளியீடு;
கிளிநொச்சித் தமிழ்ச் சங்கம்

முதற் பதிப்பு பெப்ரவரி 1998

வெளியீடு: கிளிநொச்சித் தமிழ்ச்சங்கம்

அன்பளிப்பு: உரூபா

அச்சுப்பதிப்பு: சி. க. கூ. ச. சுவாத அச்சகம்
கந்தபுரம்.

# வெளியீட்டுரை

"தமிழர் வாழ்வில் தமிழ்" என்னும் இத் தொகுப்பு நூல் கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் முதல் வெளியீடாக வருவதையிட்டு நாம் பெரு மகிழ்வடைகிறோம்.

தமிழ் மொழியின் சிறப்புகள் எண்ணிலடங்கா. பல நூற்றாண்டுகள் அந்நியரால் ஆளப்பட்டதால் பிறமொழிக் கலப்பு தமிழ் மொழியில் ஏற்பட்டு உள்ளது.

அத்துடன் எம் மக்களே தமிழைப் பேசுவதும் எழுதுவதும் உயர்வாகக் கருதாத ஒரு அடிமை மனநிலைக்கு ஆளாகியுள்ளார்கள். இந்த நிலைமாற வேண்டும். தூய தமிழைப் பேணிக்காத்து வளர்த்தல் எமது தலையாய பணி என்பதை நாம் உணர வேண்டும். மொழியின் இயல்புக்கு ஏற்ற விதமாக கலைச் சொற்களை ஆக்கி தமிழன்னைக்கு அணி செய்தல் ஆன்றோர் கடனாகும். எவ்வளவு தான் முயன்றாலும் ஆட்சி அதிகாரம் இல்லாமல் ஒரு மொழியை வளர்ப்பது மிகக் கடினமே.

விஞ்ஞான யுகத்தற்கு ஈடு கொடுக்கும் ஆற்றல் தமிழுக்குண்டா? என்ற கேள்வி எழுப்பப் படுகிறது. வருங்காலச் சந்ததியினர் இந்தக் கேள்வியை எழுப்பா வண்ணம் மொழியை பல் துறைகளிலும் வளப்படுத்தல் இன்றுள்ள எமது கடனாகும். பல அறிஞர்களின் மணியான கருத்துக்கள் இந்நூலில் இடம் பெற்று உள்ளன.

திரு. வே. பரமநாதபிள்ளை அவர்கள் அரும்பாடுபட்டு பல நூல்களைத் தேடிப் பிடித்துத் தொகுத்திருப்பதை அவதானிக்க முடிகிறது. ஆசிரியரின் இந்த முயற்சி தொடர வேண்டும். இதுபோன்ற பல நூல்கள் இன்னமும் வெளிவர வேண்டும்.

தமிழ் மக்கள் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய நூலிது. மக்களின் அமோக ஆதரவு ஆக்கபூர்வமான இம் முயற்சிக்கு கிடைக்குமென்று நம்புகின்றோம்.

'வாழ்க தமிழ், வளர்க தமிழ்'

சி. கந்தசாமி
தலைவர்,
கிளிநொச்சித் தமிழ்ச் சங்கம்

75, குமரபுரம்,
பரந்தன்,
05 – 09 – 01

# தொகுப்புரை

"தமிழென்னும் உணர்வினைச் சேரடா எங்கும்
தமிழரின் ஆட்சியே உலகெலாம் தங்கும்
இமையேனும் ஓயாது தமிழுக் குழைப்பாய்
இன்பமே அதுவென்று தமிழுக் குழைப்பாய்"

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்,

உலகில் தோன்றிய பல இன மக்களும் தம்முடைய தாய்மொழிக்கு முதன்மை அளித்து ஒவ்வொரு துறையிலும் வளர்த்து வருகின்றனர். ஆனால் தமிழ் சமுதாயம் தனது தாய் மொழியை வளர்க்க தயங்குகின்றது. இவற்றுக்குக் காரணம் அவர்களின் தாழ்வு மனப்பான்மை, மடமை என்னும் மூட நம்பிக்கை, பெற்ற அறிவை நெஞ்சுறுதியோடு பின் பற்றாமை. இத்தகைய நிலையை எண்ணி நெக்கி, நெக்கி, உருகி கண்ணீர் விட வேண்டியுள்ளது.

இளமைக்காலம் தொடக்கம் தமிழ் அறிஞர்களின் இலக்கிய நூல்களையும் வரலாற்று நூல்களையும் கற்றமையால் எங்கும் எதிலும் தமிழை வளர்க்க வேண்டும் என்ற வேட்கை என்னில் மேலோங்கி இருந்தது. என் இல்லத்தில் எனது திருமணம் தொடக்கம் ஒவ்வொரு நிகழ்வுகளும் தமிழில் நடைபெறுவதற்கு இந்த தமிழ்ப் பேரறிஞர்களின் அறிவுரைகளை தமிழ் வளர்ச்சி கருதி இவர்களின் கட்டுரைகளில் சிலவற்றை தொகுத்து வெளியிட வேண்டும் என்ற வேட்கை பல ஆண்டுகளுக்கு முன் எழுந்தது அந்த வகையில் இவற்றில் உள்ள கட்டுரைகளும், பாடல்களும் இவ்வறிஞர்களின் நூலில் இருந்து எடுக்கப் பெற்றுள்ளன அவ்வறிஞர்களுக்கு மதிப்பாளர்களுக்கும் எனது உளப்பூர்வமான நன்றி.

தமிழர் வாழ்வில் தமிழ் என்ற கட்டுரை என்னால் வரையப்பட்டுள்ளது தமிழ் அறிஞர்கள் வரலாற்று ரீதியாக கூறிய கருத்துக்களையே இதில் குறிப்பிட்டுள்ளேன். எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமாறு தமிழ்த்தாயின் பேரால் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்,

இந்நூலை கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் முதலாவது வெளியீடாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். தமிழ் கூறும் நல்லுலகம் இந் நூலுக்கு நல் ஆதரவு வழங்கித் தமிழை ஒவ்வொரு துறை தோறும் வளர்க்க முன் வரவேண்டுமென கூவியழைக்கின்றேன்.

இந்நூலுக்கு பெருமதிமிக்க அணிந்துரை வழங்கிய பேரறிஞர் அ. சண்முகதாசு அவர்கட்கு எமது நன்றிகள்

இந் நூலை அழகுற அச்சிட்டு உதவிய சி. க. கூ. ச. சமாச அச்சக மேலாளர் பணியாளர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

உங்கள் மேலான ஒத்துழைப்பையும் கருத்துக்களையும் நல்கி உதவுமாறு வேண்டுகின்றேன்

வாழ்க தமிழ்- வளர்க நற்றமிழர்.

வட்டுக்கோட்டை
**வே பரமநாதபிள்ளை**
அலுவலக உதவியாளர்-நிர்வாக அலுவலகர்
அரச செயலகம்,
கிளிநொச்சி,

கனகபுரம்,
கிளிநொச்சி,
01 - 09 - 95.

செயலர் கிளிநொச்சித் தமிழ்ச் சங்கம்,
அ. உ. நி. அ.
அரச செயலகம்,
கிளிநொச்சி,

# அணிந்துரை

திரு. வே. பரமநாதபிள்ளை தமிழ்மொழியிலே கொண்ட ஈடுபாட்டினாலேயே அம்மொழி சிதைவுறாமல் எம்மக்களாலே பேணப்பட்டும் பேசப்பட்டும் வர வேண்டுமென எண்ணி அது தொடர்பான கட்டுரைகளைக் கவிதைகளைத் தேர்ந்தெடுத்து தான் எழுதிய கட்டுரைகளுடனே ஒரு தொகுதியினை வெளியிடுகின்றார். இவ் வெளியீட்டுக்கு ஓர் அணிந்துரை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். தொகுக்கப்பட்ட கட்டுரைகள் யாவும் தமிழ்மொழி வளர்ச்சியிலே மிகு ஈடுபாடு உடையவர்களாலே எழுதப்பட்டவையாகும்.

வடமொழியாளராலும் ஆரிய சமயத்தோராலும் தமிழ் மொழியும் தமிழர் சமய வாழ்வும் எவ்வாறு தாழ்வுற்றன என்பதை பல அறிஞர்களும் எடுத்துக் கூறியுள்ளனர். தமிழ் மொழியிலேயே இறைவழிபாடு நடைபெற வேண்டுமென இடித்துரைக்கும் சைவசித்தாந்தக் கலாநிதி ஔவை துரைச்சாமிப் பிள்ளை 'வடமொழி ஆகமங்களோ, தமிழ்ச்சமய இலக்கியங்களோ யாதும் எக்காலத்தும், எவ்விடத்தும் வடமொழியிலேதான் வழிபாடு நடைபெற வேண்டும் என்ற விதியை வகுத்ததே கிடையாது என்று 'பழந்தமிழர் சமயம்'' என்னும் தன்னுடைய கட்டுரையிலே குறிப்பிடுகிறார் இக் கருத்தினையே வலியுறுத்துகிறார், முனைவர் மு. வரதராசன். இவருடைய உரைப் பகுதி ஒன்று இத் தொகுப்பிலே இடம் பெறுகின்றது

தமிழ்த் திருமணம் பற்றி முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுடைய கட்டுரை இத்தொகுதிக்கு அழகு செய்கின்றது. திருமண வாழ்த்துப் பற்றி அவர் கூறும் கருத்து நகைச்சுவையுடையதாகவும் எம் எண்ணத்துக்கு விருந்தாகவும் அமைகிறது.

'' இருபதாண்டுகளுக்கு முன்புவரை, மணமக்களை வாழ்த்தும்போது தானம், தான்யம், வெகுபுத்திரலாபம், தீர்க்காயுசு சுபமஸ்து'' என்று வாழ்த்தி வந்தார்கள். இன்று இப்படி வாழ்த்த முடியாது; வாழ்த்தக் கூடாது ஏனெனில் சட்டத்துக்குப் புறம்பானதாகப் போய்விட்டது. தனம் - தங்கக்கட்டுப்பாடு தான்யம் - தானியக்கட்டுப்பாடு, வெகுபுத்திரலாபம் – குடும்பக் கட்டுப்பாடு, ஆகவே இவ்வாறு வாழ்த்துவதும் முடியாது.''

1941 இல் இசையரசு, தண்டபாணிதேசிகர் திருவையாறு இசைவிழாவில் தெலுங்குக் கீர்த்தனைகள் பாடிவிட்டு ஒரு தமிழ்ப் பாட்டும் பாடினாராம். பித்தா பிறைசூடி பெருமானே. அருளாளா'' என்னும் சுந்தரர் தேவாரத்தை அவர் பாடத் தொடங்கியவுடன் ஒலிபெருக்கியை நிறுத்தி விட்டார்களாம். இந் நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற பாரதிதாசன் ''கொலைவாளினை எடடா'' எனச் சீற்றமுடன் கவிதை பாடினார் என அறிகின்றோம், தமிழுக்கு எவ்வளவு எதிர்ப்பு நமக்குள்ளேயே இருக்கின்றது. தமிழர்களாகிய நாம் எமது மொழியைப் பேண வேண்டும். எம்முடைய பண்பாட்டைப் பேண வேண்டும்,

''தமிழர் வாழ்வில் தமிழ்'' என்னும் திரு. வே. பரமநாதபிள்ளை அவர்களின் கட்டுரை இன்றைய நிலைமையுடன் தொடர்புறுத்தி எழுதப்பட்டுள்ளது, செயலகங்களில் தமிழ் என்ற பகுதியிலே இன்று நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை அவர் தெளிவாக எடுத்துக் கூறுகிறார். ''முற்றும் முழுதாகத் தமிழைச் செயற்படுத்துவதற்குத் தமிழரே ஒத்துழைப்பதில்லை. அரச மேலாளர்கள் திணைக்களத்தலைவர்கள் அதாவது அஞ்சலுக்கு ஆவணங்களுக்கு ஒப்பமிடும் மேலாளர்கள் தமிழ் அல்லாத அஞ்சலுக்கு ஆவணங்களுக்கு ஒப்பமிடுவதில்லை எனத் தீர்மானித்து நடந்து கொள்வார்களானால் தமிழ் நடைமுறைப்படுத்துவதை மகிழ்வுடன் பார்க்கலாம். என்று அவர் உண்மையை எடுத்துக் கூறுகிறார், நடைமுறையிலே இருக்க வேண்டிய எம்முடைய தமிழ் மொழியை நடைமுறைப்படுத்த வேண்டிய இழி நிலைக்கு நாம் வந்துவிட்டோம் இந் நிலை எமது மண்ணிலே மாறுங்காலம் நெருங்கி விட்டது. இது போன்ற நூல்கள் மக்களுக்கு உண்மை நிலையை எடுத்துக் கூற வல்லது.

அறிவிப்புப் பலகையெல்லாம்
அருந்தமிழ்ச்சொல் ஆக்குவதே அன்றி - அச்சொல்
குறைவற்ற தொடராகக்
குற்றமற்ற சொல்லாக அமையுமாயின்
செந்தமிழ்த் தாய் தமிழ் மக்கள் மகிழ்ந்திடாரோ
குறியுற்ற மறவர்களே
இப்பணியை முடிப்பதற்கோர் கூட்டம் வேண்டும்.

என்று பாரதிதாசன் பாடியதை நாம் இன்று மனங்கொள்ள வேண்டும். இப் பாடலும் இத்தொகுதியிலே இடம் பெறுகின்றது இவ்வாறாக நல்லதொரு பணிக்காய் நல்லதொரு பயனுக்காய் தமிழர் வாழ்வில் தமிழ் என்னும் இத்தொகுப்பு நூலை வெளியிடும் திரு வே. பரமநாதபிள்ளை பாராட்டுக்கு உரியவர் அவர் நோக்கு வெற்றியடைய நாம் எல்லோரும் உளத் தூய்மையுடன் பணியாற்ற எண்ண வேண்டும்;

பேராசிரியர்
முனைவர் அ. சண்முகதாஸ்
தலைவர் தமிழ்த்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
95 - 09 - 01

# உள்ளுறை


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழ்த் தெய்வ வணக்கம் — பேராசிரியர் சுந்தரம்பிள்ளை | 1 |
| 2. | தமிழ்மொழி வாழ்த்து — பாரதியார் | 2 |
| 3. | மொழியைக் காக்கும் வரம்பு வேண்டும் தமிழுண்டா? — கவிஞர் முடியரசன் | 3 |
| 4. | தமிழ்க்குழந்தை பிறமொழி சுமப்பதா? — கவிஞர் சாலையார் | 4 |
| 5. | சமய மறுமலர்ச்சி — தவத்திருகுன்றக்குடி அடிகளார் | 6 |
| 6. | இறை வழிபாடு — ஒளவை க. துரைசாமிப்பிள்ளை | 9 |
| 7. | ஆத்திகமா? நாத்திகமா? — மு. வரதராசன் | 10 |
| 8. | தமிழ்த்திருமணம் — கி. ஆ. பெ. விசுவநாதம் | 11 |
| 9. | வாணிகர் - பாரதிதாசன் | 18 |
| 10. | தமிழர் வாழ்வில் தமிழ் — வே. பரமநாதபிள்ளை | 21 |
| 11. | தமிழ் வளர்ச்சி — முனைவர் மா. இராசமாணிக்கம் | 43 |
| 12. | தமிழிசை | 50 |
| 13. | தமிழனைத் தேடுகின்றேன் — கவிஞர் காசி ஆனந்தன் | 53 |

# தமிழ்த் தெய்வ வணக்கம்

(1

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்த நறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்
அத்திலக வாசனைபோல அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந் தமிழணங்கே

(2)

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே

மனோன்மணியம் பேராசிரியர்
சுந்தரம்பிள்ளை

# தமிழ்மொழி வாழ்த்து

தான தனத்தன தான தனத்தன
தான தந்தான

1. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
   வாழிய வாழியவே

2. வானமளந்த தனைத்தும் அளந்திடும்
   வண்மொழி வாழியவே

3. ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
   இசை கொண்டு வாழியவே

4. எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
   என்றென்றும் வாழியவே

5. சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
   துலங்குக வையகமே

6. தொல்லை வினைதரு தொல்லை யகன்று
   சுடர்க தமிழ் நாடே

7. வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
   வாழ்க தமிழ்மொழியே

8. வானம அறிந்த தனைத்தும் அறிந்து
   வளர்மொழி வாழியவே

மகாகவி பாரதியார்



# மொழியைக் காக்கும் வரம்பு வேண்டும்

வயலுக்கு வரப்பொன்றும் வேண்டாம் என்றால்
வளக் கரைகள் ஆற்றுக்கு வேண்டாம் என்றால்
இயல்மொழிக்கு இலக்கணமும் வேண்டாம் பெண்ணே
இயலறிவு மொழியறிவு இல்லார் சொல்லும்
மயலுரையை நம்பாதே மொழியைக் காக்கும்
வரம்பிலையேல் எம்மொழியும் அழிந்து போகும்

முடியரசன்

# தமிழுண்டா?

மண வினையில் தமிழுண்டா? பயின்றார் தம்முன்
வாய்ப்பேச்சில தமிழுண்டா? மாண்டபினர்
பிண வினையில் தமிழுண்டா? ஆவணத்தில்
பிழையோடு தமிழுண்டு, கோவில் சென்றால்
கணகணவென் றொலியுண்டு, தமிழைக் கேட்கக்
கடவுளரும் கூசிடுவர், அந்தோ, அந்தோ,
அணுவளவும் மொழி உணர்ச்சி யில்லா நாட்டில்
ஆத்திகரே இறையுணர்ச்சி வளர்வ தெங்கே

முடியரசன்

## தமிழ்க் குழந்தை
## பிறமொழி சுமப்பதா?

ஆலமரக் கிளையிலே ஒருகிளையிலேனும்
அவரைக்காய் காய்ப்பதில்லை — உலகறிந்த உண்மை

நிலமிட்டுத் துவைத்தெடுத்த ஆடைகள் எங்கும்
தெரிவதில்லை அழுக்கு — இதுவும் உலகறிந்த உண்மை

காலவட்டச் சுழற்சியினும் தாய்தகப்பன்மாரைக்
கடன்வாங்கிக் கொள்வதில்லை — உலகறிந்த உண்மை

கோலமிகும் தமிழ் வீட்டுக் குழந்தைகளில் மட்டும்
குறைப் பெயரும் அயல் மொழியும் கும்மளிப்பது என்னே!

தாய்மொழி என்று ஒன்று இங்கே இருக்கின்றபோது
அம்மொழியின் தாய், தந்தை, குழந்தை பெறும் போது
வாய் நிறைய கொஞ்சுவதற்கு வைக்கின்ற பெயரில்
வந்தேறிய பிறமொழிகள் கலந்திடுதல் என்னே?
நோய் நொடிகள் இல்லாதவாழ்வுக்கு மக்கள்
நுகர்கின்ற எல்லாமே தூயனவாய் வேண்டும்
நாய்களுக்கு வைத்துவிடும் பெயர்போலே இங்கே
தாம பெறும் பிள்ளைகளுக்குப் பெயரிடுதல் நன்றோ.

அறிவியக்கக் கவிஞர் சாலையார்

# சமய மறுமலர்ச்சி

தவத்திரு
குன்றக்குடி அடிகளார்

ஆண்டவனை வணங்கப் போகும் ஆலயம் சொல்லித் தரும் பாடம் 'பிறருக்காக வாழ்க' என்பதே ஆம் திருக்கோயிலிலே முதலிலே எருதுதான் காட்சியளிக்கிறது அந்தக் காட்சி சொல்லும் அறிவுரை தலையாய அறிவுரை 'ஏ, மனிதனே! நீ மனிதன் என்று மார்தட்டாதே பகுத்தறிவாளன் என்று பறை சாற்றாதே பெருமிதம் கொள்ளாதே! இந்த எருத்தினுடைய-பிறர் நலம் கருதுகின்ற, உழைக்கின்ற, உள்ளத்தை முதலில் பெறுவாயாக'' அந்த உள்ளம் உனக்கு வந்து விட்டதானால் சமய வாழ்க்கையில் இறைவனோடு தொடர்பு கொள்ளும் இன்ப வாழ்க்கையில் நுழைகின்றாய்! என்று திருக்கோயில் சாற்றுகின்றது. அதனாலன்றோ சமயப் பெருமக்கள் எருத்தையே ஊர்தியாகவும் கொடியாகவும் அமைத்தனர்.

குன்றக்குடி அடிகளார்



தமிழினத்தின் வாழ்வு சமயப் பண்பிலேவளர்ந்து வளம் பெற்றது வாழ்க்கைக் கடலில் வீசும் துன்பத்தை இன்பமாக மாற்றிக் கொடுப்பது சமயம். அன்பு பொருந்திய-அறம் தழுவிய-ஒழுக்கம் நிறைந்த நல்வாழ்வைக் கொடுக்கும் தகுதி சமயத்திற்கே உண்டு. சமய சார்பற்ற ஒழுக்கம் உலகில் நிலைபெற்றிருத்தல் இயலாது தனி வாழ்வின் தேவைகள் நிறைந்து கொண்டிருக்கின்ற அளவுக்குத்தான் சமய சார்பற்ற ஒழுக்கம் நிலைபெற்றிருக்க முடியும். வாழ்க்கையில் தேவை பெருகி அவை கிடைக்காது போகுமானால் ஒழுக்கம் சிதைந்து-எவ்வகையிலும் தேவையை நிறைவு செய்து கொள்ள மக்கள் தலைப்படுவர் சமய வாழ்வொன்றாலேயே நீதியையும் நேர்மையையும், ஒழுக்கத்தையும் காக்க முடியும், இதனை நன்குணர்ந்தே தமிழ் மக்கள் சமய வாழ்க்கையின் இன்றியமையாமையை வற்புறுத்தினர்.

தமிழர் கண்ட சமய வாழ்வு அகம், புறம் இரண்டுக்கும் ஒத்த சமய வாழ்வு இரண்டும் இயைந்து கலக்காத வாழ்வு வாழ்வல்ல அதனாலேயே அகமும் புறமும் (புறக் கருவிகள்) ஈடுபடுகின்ற வழிபாட்டு முறையைத் தமிழகத்துச் சமயம் வற்புறுத்துகின்றது நமது சமயம் வழிபாட்டுக் கலையிலும் வாழ்த்துகின்ற பண்பிலும் மிகச் சிறந்து நிற்கின்றது அதனால் வழிபாட்டிற்காக விண்ணை அளந்து காட்டுகின்ற பல நூற்றுக் கணக்கான ஆலயங்களை எடுத்து வழிபட்டனர் இதன் மூலம் அகத்தின் நல்லுணர்ச்சியை காத்துப் பெருக்கிக் கொண்டனர். புறத்தால் தாங்கும் வேடங்கள் பலவற்றைக் கைக்கொண்டு அவற்றின் மூலமும் சிந்தனையைத் திருத்தி சிவத்தில் ஆழ்த்தினர் காலப போக்கில் சமய வாழ்வு சிதைந்து கொண்டே வந்தது சமயம் வேறு வாழ்க்கை வேறு என்ற புல்லிய உணர்ச்சி தலையெடுத்து வளர்ந்தது. வாழ்க்கையோடு ஒட்டிய சமயம் சடங்குச் சமயமாக மாறிவிட்டது. அகத்தைத் தூய்மைப்படுத்த செய்யப்பெறும் சடங்குகள் உள்ளத்தோய்வுடன் செய்யப்பெறாமையினால் வழிபாடுகளும் சடங்குகளும் நெஞ்சத்தில் கலக்கவில்லை இருதயத்தில் ஒலிக்க வேண்டிய சமயம் வாயளவிலே ஒலிக்கும் நிலைக்கு வந்து விட்டது. உண்மைச் சமய வாழ்வு அருகிக் கொண்டே வந்தது அதனால் பண்பாடும் சிதைந்து சாதி முதலிய போலிப் பிளவு மனப்பான்மைகளும் உருவெடுத்த விட்டன.

ஆனால் இப்பொழுது சில ஆண்டுகளாக எங்கும் ஒரு
மாற்றம் சமயத்துறையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.
சமய சார்பற்ற வாழ்க்கை சாரமற்ற வாழ்க்கை என்று மக்கள்
நம்புகின்ற நிலைக்கு வந்துள்ளனர் வாழ்க்கையோடு ஒன்று
பட்ட சமய வாழ்வை விரும்புகின்ற வேட்கையும் மலர்ந்திருக்
கின்றது எங்கும் சமயத்தின் பேச்சும் ஊர்தோறும் கூட்டு வழி
பாட்டு இயக்கங்களும் பொதுப் பிரார்த்தனைகளும் உண்டா
கிக் கொண்டிருக்கின்றன.

சமயத்தால் எழுந்தவை திருமடங்கள், சமயத்திற்காகவே
வாழும் தகுதியுமுடையன திருமடங்கள் சமயக் கொள்கை
யைப் பேணிக் காத்து மக்களை அருள்நெறியில் ஆற்றுப் படுத்
தும் கடமையை மேற்கொண்டவைகளே திருமடங்கள், சன்
மார்க்க சாலைகளாக தமிழ் வளர்க்கும் பண்ணைகளாக விள
ங்கியவை, விளங்க வேண்டியவை திருமடங்கள், நல்லூழின்மை
யின் காரணமாக இந்த நிலை சில காலம் மாறுபட்டிருந்தது
என்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டியிருக்கின்றது, இப்
பொழுது சில ஆண்டுகளாக மடாதிபதிகளின் வாழ்க்கையிலும்
மாற்றம். அவர்களும் பணியில் ஈடுபட்டு விட்டார்கள்

சமய நூல்கள் எல்லாம் அச்சு வாகனம் ஏறி வெளி
வந்து கொண்டிருக்கின்றன. சமய நூல்களின் பயிற்சியிற்
சிறந்தார்க்குப் பரிசுகள் வழங்கி ஊக்கமும், உணர்வும் ஊட்
டப் பெறுகின்றது கல்வி நிலையங்கள் பல உண்டு அவற்றின்
மூலம் அறிவோடு அருள் உணர்ச்சியும் பரப்புகின்றது வீதி
களிலும், வீடுகளிலும் நின்று சமயக் கொள்கைகளைப் பரப்பு
கின்றனர் சேரிகளிலும் சிறைகளிலுங்கூடப் புகுந்து தமது பணி
யினைச் செய்யத் தலைப்பட்டு விட்டனர் நாட்டின் வரலாற்றில்
சமயத்தின் மடாதிபதிகளால் ஏற்பட்ட இம் மறுமலர்ச்சி
வரவேற்கத் தக்கது வாழ்த்தத் தக்கது

தக்க அறிவு சான்ற பெருமக்களின் தனி வாழ்விலும்
இன்று ஒரு மாற்றம் காண்கிறது. ஆங்கிலம் படித்து ஊதியம்
பார்த்து ஊதியம் பெறுதலிலேயே ஈடுபட்டிருக்கும் மனநிலை
இன்று பலரிடத்தில் இல்லை அவர்களும் அருள் நெறி வளர்க்
கும் பணியில் பல்வேறு பகுதிகளிலும் சிறந்த முறையில் சம
யப் பணி செய்து வருகின்றார்கள், இத்தகு பெருமக்களால்
தமிழகத்தின் சமயத் துறையில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சி
மறக்க முடியாததொன்று



தமிழ் நாட்டில் தமிழ்ப் பெருமக்களது உணர்வில் எழுந்தவை ஆலயங்கள். முத்தமிழ் பயிலும் பள்ளிகளோ தேவாலயங்கள் தமிழ் பயிலவேண்டிய ஆலயத்தில் தமிழ் மறக்கப்பட்டது வேற்று மொழி இடம் பெற்று வேரூன்றி விட்டது. கடவுளோடு உறவாடிய கன்னித் தமிழ் என்று வரலாறு பேசுவர், நால்வரின் தமிழ் மறையே நானிலத்தை வாழ்விக்கும் என்று எடுத்துப் பேசுவர். எனினும் ஆலயத்தில் தமிழுக்கு இடம் கொடுக்காதிருந்தனர். நெஞ்சம் தொடாத மொழியில் வழிபாடு செய்வது பழக்கத்தின் மூலம் வழக்கமாகிவிட்டது தமிழ் அன்பர்களுக்கும் தமிழ்த் தொண்டர்களுக்கும் இந்த நிலை தாங்கொணாத் துயரத்தைத் தந்தது. தேவார, திருவாசகங்கள் முழங்காத ஆலயங்கள் எதற்கு என்ற எண்ணம் இதயங்களில் எதிரொலித்தது எண்ணம் பாழ்படுமா? இன்று தமிழ் நாட்டில் பல தேவாலயங்களில் அருமைத் தமிழில் அர்ச்சனையும் வழிபாடும் நடைபெறுகின்றன தமிழ் நாட்டின் எல்லா ஆலயங்களிலும் முத்தமிழ் முழங்கும் காலம் விரைவில் வர மறுமலர்ச்சி வித்திட்டுள்ளது யாரும் மறுக்க முடியாது.

தமிழ் நாட்டின் தனித்த பண்பு சமயச் சண்டையில் ஈடுபடாது பல்வேறு சமயங்களையும் உவப்புடன் ஒப்பக் கருதும் பண்பாடு ஆகும், இது தமிழர்களுக்கு இயற்கையிலேயே உண்டு எனினும் இடையில் பல சந்தர்ப்பங்களில் சமய வெறியும் பூசல்களும் எழுந்தன. ஆனால் மறுபடியும் இன்று பிற சமய வெறுப்பின்றி சமயம் வளர்க்கப்பெறுகின்றது. சமயத் துறையில் வெறுப்பும் காழ்ப்புங் கொள்ளாது பல்வேறு சமயங்களையும் ஒப்பக் கருதும் இன்றைய மறுமலர்ச்சி காலத்திற்கேற்ற மறுமலர்ச்சி. தேவையான மறுமலர்ச்சியுமாகும்.

சமயத்தின் பேரால் சாதிகள் பிறப்பிக்கப் பெற்றதுண்டு இன்று சாதிகள் தகர்த்தெறியப்பெற்று வருகின்றன ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற பண்டைத்தமிழனின் குரல் மீண்டும் தமிழகத்தில் ஒலிக்கின்றது. வாழ்க்கையிலும் கைக்கொள்ளப் பெறுகின்றது தமிழினம் ஒரு குலமாக ஒன்றுபட சமயத் துறையில் ஏற்பட்டுள்ள இந்த மறுமலர்ச்சி வேண்டத் தக்கது விரும்பத்தக்கது.

இங்ஙனம் தமிழ் நாட்டில் சமயத் துறையில் புதியதொரு பொலிவும் மறுமலர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. இம் மலர்ச்சி இயக்கத்தில் ஆயிரக் கணக்கான ஆர்வமுடைய இளைஞர்களும் பெருமக்களும் ஈடுபட்டுள்ளனர் இத்தகு மறுமலர்ச்சியால் தமிழகம் அருள் வெள்ளம் பொங்கி ததும்பும் திருநாடாக விளங்கப் போகிறது என்று நமது இதயம் சொல்கிறது.

நன்றி

( சமயமறுமலர்ச்சி நூல் )



# இறை வழிபாடு

சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுக என்பது தமிழர் வழிபாட்டு முறை. இன்றைய தமிழர், தெய்வ வழிபாட்டில் தாம் அறியாத மொழியில் ''முறம் போன்ற காதுகளை உடையவனே'' ''குடம் போன்ற வயிற்றை உடையவனே'' ''பெண் இன்பத்தைப் பெரிதும் விரும்புபவனே'' என்று ஆண் தெய்வங்களையும், ''மலை போன்ற கொங்கைகளை உடையவளே'' ''கடல் போன்ற நிபந்தனையுடையவளே' இடையறாத போகத்தை விரும்புபவளே'' என்று பெண் தெய்வங்களையும் வழிபாடு என்ற பெயரால் வசைபாடுகின்றனர். இன்றைய வழிபாட்டு அர்ச்சனைகளில் தெய்வ தூசணமும், வஞ்சனையும் மிகுந்திருக்கிறதேயன்றிப் பூசையும் வணக்கமும் இல்லை என்றால் அது மிகையாகாது. வடமொழி தொடர்களைக் கேட்கும் வடமொழி அறிஞர் மனத்தே வெறுப்பும் முகத்தே சுழிப்பும் கொண்டு வருந்துகின்றனர். அரசியல், கல்வி, வாணிபம் முதலிய எல்லாத் துறைகளும் மக்கள் வழங்குகின்ற மொழியிலேயே இயங்க வேண்டும், என்ற வேட்கை மீதூர்ந்திருக்கும் இந்நாளில் தமிழருள் சிலர் மொழிவெறி கொண்டு தம் சமய வழிபாட்டில் செய்து வரும் பெரும் பிழையைத் திருத்திக்கொள்ளாமல், விடாப்பிடியாக இருப்பது சமய வளர்ச்சிக்கு ஆதரவு தருவதாகத் தோன்றவில்லை. வடமொழி அறிஞருக்கும் வெறுப்புத் தந்து நாட்டு மக்களுக்கு இருளை விளைவித்துச் சமய உணர்ச்சி ஒழுக்கங்களுள் மக்கள் உள்ளத்தில் புறக்கணிப்பை நல்கும் இப்பிழைபட்ட வழிபாட்டு முறையை சமய நிலையங்களில் இனியும் நீடிக்க விடுவது அறமாகாது. மேலும் வடமொழி ஆகமங்களோ, தமிழ்ச் சமய இலக்கியங்களோ யாதும் எக்காலத்தும் எவரிடத்தும் வட மொழியில் தான் வழிபாடு நடைபெற வேண்டுமென்ற விதியை வகுத்ததே இடையாது. வாழ்க்கைத் துறையில் தான் போலிச் செயல் பெருகிச் சென்றால், வழிபாட்டில் போலியுரை வருமானால் தெய்வங்களின் அருள்தான் கைவருமோ என்று உள்ளம் அஞ்சுகிறது. தெய்வம் தான் துணை செய்ய வேண்டும்.

சைவசித்தாந்தக் கலாநிதி
துணைவேந்தர் பேராசிரியர்
ஔவை சு. துரைச்சாமிப்பிள்ளை
தமிழர் இனிய வாழ்வு நூல்
பழம் தமிழர் சமயம் கட்டுரை

## ஆத்திகமா? நாத்திகமா?

தமிழ் நாட்டுக் கோயில்களில், தமிழில் வழிபாடு இல்லை ஏன்? தமிழில் இலக்கியவளம் இல்லையா? வேறு சிறப்புக்கள் இல்லையா? உலகில் வேறு எங்கும் இல்லாத அளவிற்குப் பக்திப் பாடல்கள், ஆழ்வார் நாயன்மார்களின் அன்பு கனிந்த பாடல்கள், பல்லாயிரக் கணக்காக தமிழ் மொழியில் இருக்கும் போது ஏன் இந்தத் தவறு செய்தல் வேண்டும்? ஊர் ஊராகச்சுற்றி ஆழ்வார்களும், நாயன் மார்களும் அன்பு கனிந்த பாடல்களைத் தமிழிற் பாடி வைத்திருக்கும் போது அந்நன்றியெல்லாம் மறந்து நன்றி கொன்ற மக்களாய் கோயிலிற் தமிழில் வழிபாடு செய்யக் கூசுவதா? இதயக் கனிவிற்குத் துணை செய்யாத, பெரும்பாலோர்க்குப் பொருளும், விளங்காத தாய் மொழி அல்லாத வடமொழியில் ஏன் வழிபாடு செய்தல் வேண்டும்? ஏமாறுகின்ற மக்கள் இருக்கின்றார்களே என்றால் அவர்களைக் கண்டு அறிஞர்கள் இரங்க வேண்டும் அன்றோ அதை விட்டு அவர்களுடைய ஏமாற்றத்தை தன்னலத்துக்குப் பயன்படுத்திக் கொள்வது ஆத்திகமா? நாத்திகமா?

முனைவர் மு. வரதராசன்

★

தெற்கோதும் தேவாரம் திருவாய் தன்
மொழியான தேனிருக்கச் செக்காடும்
இரைச்சலென வேதபாராயணமேன்

— பாவேந்தர் பாரதிதாசன்

# தமிழ்த் திருமணம்

முத்தமிழ் காவலர்

கி. ஆ. பெ. விசுவநாதம்

தாய்மார்களே, பெரியோர்களே, அன்பர்களே வணக்கம் எல்லோருடைய நல்லெண்ணப்படியும், வாழ்த்துதற்படியும் இன்று இங்கு தமிழ்த் திருமணம் நடைபெறுகின்றது நாமனை வரும் சான்று கூறவும் வாழ்த்துக் கூறவும் கூடியுள்ளோம்.

## தமிழ்த் திருமணம்

மணமக்களின் பெற்றோர்கள் இத் திருமணத்தைத் தமிழ்த் திருமணமாக நடத்தி வைக்க முன்வந்திருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இதற்காக மணமக்களின் பெற்றோர் களைப் பாராட்டுகின்றேன்

## புதிய முறை

இங்கு வந்துள்ள சாதித் தலைவர்கள், நாட்டாண்மைக் காரர்கள், பெரிய தனக்காரர்கள், வயது முதியவர்களில் யாராவது ஒருவர், இத் திருமணம் புதிய முறையில் நடக்கிறதே என்று எண்ணினால் தயவு செய்து அவர்கள் முதலில் தங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும் ஏனெனில், இதுதான் பழையமுறை.

## பழைய முறை

பழங்காலத்தில் தமிழகத்தில் ஒத்த குணம், ஒத்த நிறம் ஒத்த வயது, ஒத்த கல்வி இவைகளையுடைய காளையும் நங் கையும் ஆகிய இருவரும் பெற்றார் கொடுக்கக் கொண்டு வாழ்க்கை ஒப்பந்தம் செய்து இல்லறத்தை இனிது நடத்தி வந் தனர் ஆரியர்களை வைத்துச் சடங்குகளை செய்து திரும ணத்தை நடத்துகிற முறை தமிழகத்தில் இடைக்காலத்திலே புகுந்த ஒன்று அது இடைக்காலத்திலே அழிந்து போயிற்று! அவ்வளவு தகவ்

பழமை இப்போது மறுமலர்ச்சியடைந்து வருகின்றது. வந் திருக்கின்ற பெருமக்கள் அனைவரும் மனம் மகிழ்வோடு இதை வாழ்த்துவதுடன், தங்கள் தங்கள் ஊர்களுக்குச் சென்ற பிறகு அங்கு இம் மாதிரித் திருமணங்கள் நடைபெற வேண்டுமென முயற்சிப்பது நல்லது எனத் தெரிவித்துக் கொள்கின்றேன்



தமிழகத்தில், இப்போது சுயமரியாதைத் திருமணம், சீர் திருத்தத் திருமணம். தமிழ்த் திருமணம், அரசியல் திருமணம், பதிவுத் திருமணம், எனப் பல்வேறு முறைகளில் திருந்திய திரு மணங்கள் பல்வேறு வகையாக நடைபெற்று வருகின்றன. இவையனைத்தும் எதிர் காலத்தில் ஒன்றுபட்டு ஒரே முறை யில் நடைபெற வேண்டுமென விரும்புகிறவர்களில் நானும் ஒரு வன். பெருமக்களாகிய நீங்களும் அவ்வாறே விரும்ப வேண்டு மென்பது எனது எண்ணம்.

நான் இன்று நடத்தி வைக்கும் திருமணம் இரண்டாயி ரத்து முந்நூற்றைத் தாண்டிய திருமணம் கடந்த 47 ஆண்டு களாகவே திருமணத்தை நடத்தி வருகின்றேன். நான் நடத்தி வருகின்ற இத் தமிழ்த் திருமண முறை. தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் என் மக்களுக்கு நடத்தி வைத்த முறை எல்லோரும் நன்றாக வாழ்ந்து வருகின்றனர்.

## பதினாறு பேறு

இப்போது திருமணத்தில் வாழ்த்துக் கூறுவது ஒரு சடங் காகப் போய்விட்டது. பழங்காலத்தில் பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழுங்கள் என்று வாழ்த்துவார்கள். அது பதி னாறு பிள்ளைகளைப் பெறுவது என்பதல்ல. ஒருவருடைய வாழ்வு பெருவாழ்வாக அமைய வேண்டுமானால் அவன் பதி னாறு பேறுகளையும் பெற்றிருக்க வேண்டும் மென்பது கருத்து.

அப்பேறுகள்? மாடு, மனை, மனைவி, மக்கள், கல்வி, செல்வி, அறிவு ஒழுக்கம், நிலம், நீர், வயது வாகனம் பொன் பொருள் போகம், புகழ் என்பன.

## தனம், தான்யம்

இரண்டாவதாக இருபதாண்டுகளுக்கு முன்புவரை, மண மக்களை வாழ்த்தும் போது ''தனம். தான்னியம், வெகுபுத் திரலாபம், தீர்க்காயுசு, சுபமத்து'' என்று வாழ்த்தி வந்தார் கள். இன்று இப்படி வாழ்த்த முடியாது; வாழ்த்தக்கூடாது, ஏனெனில் இது சட்டத்திற்குப் புறம்பானதாகப் போய்விட் டது. தனம்-தங்கக்கட்டுப்பாடு; தான்யம்-தானியக் கட்டுப்பாடு வெகு புத்திரலாபம்-குடும்பக்கட்டுப்பாடு: ஆகவே இவ்வாறு வாழ்த்துவதும், முடியாது.

யாரைப்போல

மூன்றாவது வாழ்த்துவதில் ஒரு புதிய முறை, புலவர்களெல்லாம் மலரும் மணமும் போல, கரும்பும் சுவையும் போல ஒன்றுபட்டு வாழுங்கள் என்று மணமக்களை வாழ்த்துகின்றார்கள் நல்லறிஞர்கள் பலர் இராமகிருஷ்ண பரமகம்சரும் சாரதாமணிதேவியும் போல வாழுங்கள் என்று வாழ்த்துகிறார்கள். அரசியல் தலைவர்கள் சிலர் காந்தியடிகளும் கஸ்தூரிபாயும் போல, அறிஞர் அண்ணாவும் இராணியும் போல வாழுங்கள் என்று வாழ்த்துகிறார்கள். இந்த 70 ஆண்டுகளாகத் திருமணங்களில் பங்கு பெற்று வருகின்றேன், எவராவது ஒருவர் என்னைப்போல என் மனைவியைப் போலவாழுங்கள் என்று சொல்லக் கேட்டதில்லை; சொல்லத்துணிவும் இல்லை. அதனால் தான் அவர்கள். அவர்களைப் போல இவர்களைப் போல வாழுங்கள் என்று சொல்லிப் போய்விடுகிறார்கள். நான் ஏன் இதை இங்கு குறிப்பிடுகிறேன் என்றால், இன்று திருமணம் புரிந்து கொள்ளும் மணமக்கள், இருபது ஆண்டுகளுக்குப் பிறகு மணமக்களை வாழ்த்தும்போது, என்னைப் போல என் மனைவியைப் போல என்னைப்போல என் கணவனைப்போல வாழுங்கள் என்று இருவரும் வாழ்த்தியாக வேண்டும் என்பதற்காகவே, அதற்கு அவர்கள் இப்போதே திட்டமிட்டு வாழ்க்கையைத் தொடங்கியாக வேண்டும்.

பொறுப்பு அதிகம்

ஐயரை வைத்துச் சடங்குகளைச் செய்து திருமணம் நடத்துகின்ற மணமக்கள், எவ்வளவு தவறுகளைச் செய்தாலும் இந்தநாடு தாங்கிக் கொள்ளும். இம்மாதிரிச் சீர்திருத் திருமணம் செய்து கொண்ட மணமக்கள் ஒரு சிறு தவறு செய்தாலும் நாடு தாங்காது; ஏற்காது. இன்று புதிதாக இல்லறத்தில் வலது காலை எடுத்து வைக்கும் மணமக்கள். இதை உள்ளத்தே வைத்துத் தம் வாழ்க்கையைத் தொடங்கியாக வேண்டும். சீர் திருத்தத் திருமணம் செய்து கொள்கிறவர்களுக்குப் பொறுப்பு அதிகம் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வது நல்லது.

வாழ்த்துப் பலிக்க

நல்லவர்கள் வாழ்த்துவதனாலேயே நாம் வாழ்ந்துவிடலாமென்று மணமக்கள் நம்பிவிடக்கூடாது; இப்படி நம்பினால் ஏமாற்றமடைவார்கள். நல்லவர்களின் வாழ்த்துதலுக்கேற்ப மணமக்கள் உறுதியாகவும், திறமையாகவும், நேர்மையாகவும், ஒழுக்கமாகவும் நடந்து கொள்ள வேண்டும்; அப்பொழுது தான் தலைவர்களின் வாழ்த்துகளும் பலிக்கும்.



இல்லறம்

நான் ஒரு நாடோடி 70 ஆண்டுகளுக்கு மேலாக நாடு முழுவதும் அலைந்து திரிந்து சுற்றிப் பார்த்திருக்கிறேன். இந்துக்கள் அல்லாத இசுலாமிய கிறித்தவ புத்த சமண பார்சிகக் குடும்பங்களிலெல்லாம் கணவன் மனைவி சண்டைகள் மிகக் குறைவு. பாழ்பட்ட நம்முடைய சமுதாயத்தில்தான் கணவன் மனைவி சண்டைகள் மிகமிக அதிகமாக இருக்கின்றன. இதற்கு அடிப்படைக் காரணம் அவர்கள் திருமணக் காலங்களில் அவரவர்களின்மத குருமார்கள் வாழ்க்கை என்றால் என்ன? எப்படிவாழ்வதுஎன்பதை உணர்த்தி மணமக்களுக்கு அறிவுரையும் கூறி வாழ்க்கையில் ஈடுபடுத்துகிறார்கள்.

ஆனால் நாமோ அறியாத ஒருவரைக் கொண்டுவந்து வைத்து, தெரியாத சடங்குகள் எதை எதையோ செய்து, புரியாத மொழியில் எது எதையோ சொல்லி, வாழ்க்கையென்றால் இன்னதென அறிவிக்காமலேயே அவர்களை வாழ்க்கையில் ஈடுபடுத்தி வருகிறோம். அதன் விளைவே இது.

இனியேனும் இத் தவறுகளைச் செய்யாமல், திருமண நாட்களில் சில தமிழ் அறிஞர்களைக் கொண்டு மணமக்களுக்கு அறிவுரையும் அறவுரையும் கூறுவது நலமாகும்.

*

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய்த் தமிழ்ச் செய்யுமாறே

— திருமூலர்

# தமிழ்த் திருமண முறை

நாவலர், ச, சோமசுந்தர பாரதியார் அவர்களும்

தமிழ்த் தென்றல் திரு, வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களும்
நடத்தி வந்தவை

01 தமிழ்த் தாய் வாழ்த்து - இறைவணக்கம்

02 திருமணத்தை நடத்தி வைக்கத் தலைவரை வேண்டுதல்

03 தலைவர் முன்னுரை

04 மணமகனுக்கு தாய் மாமன் மலர்மாலை அணிதல்

05 மணமகளுக்கு தாய்மாமன் மலர்மாலை அணிதல்

06 மணமகன் பெற்றோர் திருவடிகளில் சந்தனம், மலர் வைத்து வணங்கி எழுதல்

07 மணமகள் பெற்றோர் திருவடிகளில். சந்தனம், மலர் வைத்து வணங்கி எழுதல்

08 மணமகன் உறுதிமொழி

'தாய்மார்களே. பெரியோர்களே, தாங்கள் எல்லோர் முன்னிலையிலும் என் அருகிலுள்ள திருச்செல்வி ——— யை நான் இன்று என் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்கிறேன். வாழ்விலும் தாழ்விலும், இன்பத்திலும் துன்பத்திலும், உடனிருந்து சமஉரிமை வழங்கி வள்ளுவர் நெறி நின்று இல்லறத்தை இனிது நடத்துவேன் என உங்கள் முன்பு உறுதி கூறுகிறேன்'

09 மணமகள் உறுதிமொழி;
"யானும் அவ்வாறே உறுதி கூறுகிறேன்"

10 தேங்காய் பழத்தட்டு ஒன்று மங்கல நாணுடன் பெரியோரின் வாழ்த்துக்காக சென்று வருதல்



11 உதிரிப் பூக்களை வாழ்த்துவதற்காகத் தாய்மார்களுக்கும் பெரியோர்களுக்கும் வழங்குதல்.

12 திருப்பூட்டுதல்.

13 வயது முதிர்ந்த பெண்களில் சிலர் மங்கல நாணில் சந்தனம் குங்குமம் வைத்து வாழ்த்துதல்.

14 வயது முதிர்ந்த ஆண்களில் சிலர் மணமக்களுக்குத் திருநீறு இட்டு வாழ்த்துதல்.

15 மணமகனுக்கு மைத்துனன் மோதிரம் அணிதல்

16 மைத்துனனுக்கு மரியாதை செய்தல்.

17 மணமக்கள் மாலை மாற்றிக் கொண்டு மாறி உட்காருதல்.

18 சக்கரையை மணமக்களுக்கு வழங்கி மற்றவர்களுக்கும் வழங்குதல்.

19 நல்லறிஞர் சிலர் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்குதல்

20 தலைவர் முடிவுரை.

21 மணமக்களைப் பொன்னாலும் பொருளாலும் வாழ்த்தி பாலும் பழமும் கொடுத்தனுப்புதல்.

(நன்றி மணமக்களுக்கு)

# வாணிகர்

வாணிகர் தம் முகவரியை
வரைகின்ற பலகையில் ஆங்
கிலமா வேண்டும்?

மாணுயர்ந்த செந்தமிழால்
'வரைக' என அன்னவர்க்குச்
சொல்ல வேண்டும்.

ஆணி விற்போன் முதலாக
துணிவிற்போன் ஈறாக
அனைவர் போக்கும்,

நாணமற்றதல்லாமல்
நந்தமிழன் நலம் காக்கும்
செய்கையாமோ?

உணவு தரு விடுதி தனை
'கிளப்' எனல் வேண்டும் போலும்
உயர்ந்த பட்டுத்

துணிக்கடைக்கு 'ஸில்க்ஷப்'
எனும் பலகை தொங்குவதால்
சிறப்புப் போலும்

மணக்கவரும் தென்றலிலே
குளிரா இல்லை தோப்பில்
நிழலா இல்லை?

தனிப்பரிதாம் துன்பமிது
தமிழகத்தின் தமிழ்த் தெருவில்
தமிழ்தா னில்லை

'பவன்' 'மண்டல்' முதலியன
இனியேனும் தமிழகத்தில்
பயிலா வண்ணம்.



அவன் சென்று முழங்கிடுவீர்
ஆங்கிலச் சொல் இந்திமொழி
வடசொல் யாவும்.

இவண் தமிழிற் கலப்பதுண்டோ?
பிராமணர் கள் உண்ணும்
இடம் இப் பேச்சில்

உவப்புண்டோ தமிழ் மானம்
ஒழிந்திடுதே ஐயகோ
உணர்வீர் நன்றே

அறிவிப்புப் பலகை யெல்லாம்
அருந்தமிழ்ச் சொல் ஆக்குவதே
அன்றி அச்சொல்

குறைவற்ற தொடராக
குற்றமற்ற சொல்லாக
அமையுமாயின

மறுவற்றுத் திகழாளோ!
செந்தமிழ்த் தாய்? தமிழ் மக்கள்
மகிழ்ந்திடாரோ!

குறியுற்ற மறவர்களே
இப்பணியை முடிப்பதற்கோர்
கூட்டம் வேண்டும்

பேச்சாலும் எழுத்தாலும்
பாட்டாலும் கூத்தாலும்
பிறர் உவக்க

ஓச்சுகவே மணி முரசு
வீதியெல்லாம் வரிசையுற
உலவா நிற்பீர்

ஏச்சாலும் எதிர்ப்பாலும
வருகின்ற இன்னலுக்குள்
இன்ப வெள்ளம்

பாய்ச்சாதோ பொதுத் தொண்டு
பைந்தமிழ்ச் செய்யுந் தொண்டு
பருக வாரீர்

பாரதிதாசன்

பாலில் மொழிகளில் பக்தியை பெருக்குவது
பைந்தமிழே
எரமனின் உள்ளத்தை பாகாக உருகவைப்பது
செந்தமிழே

- வணபிதா தனிநாயக அடிகளார்

# தமிழர் வாழ்வில் தமிழ்

வே. பரமநாதபிள்ளை

## தமிழ் மொழியின் மேன்மையும் தொன்மையும்

மொழி என்பது மாந்தனின் உள்ளுயிரில் தோன்றி உணர்வு வளர்ச்சிக்கேற்ப மூகிழ்ந்து ஒலி வடிவாய் வெளி வரும் ஓர் இயற்கை வெளிப்பாடு அஃது அவன் அறிவுவளர வளர ஒலித்தொகுதிகளாய் விரிந்து கருத்துக்களை புலப்படுத் தும் சொற்களாய் இணைந்து சொற்றொடர்களாய் விளங்கி கால அடைவிலும் அறிவுப்படிநிலை வளர்ச்சியிலும் மலர்ச்சி யுற்று மக்களுக்கு ஓர் இணைப்புணர்வுப் பாலமாய் இருந்து அவர்களைக் கடைத்தேற்றுவது'' அத்துடன் மக்கள் தங்கள் வாழ்க்கையை செம்மைப்படுத்திக் கொள்ளவும், நாகரீகத்தை வளர்த்துக் கொள்ளவும் பண்பாட்டை மேம்பாடடையச் செய்து கொள்ளவும் வரலாற்றை உருவாக்கிக் கொள்ளவும், இலக்கி யத்தை செழிக்கச் செய்யவும், கலைகளை வளர்க்கவும் இன் றியமையாததாகப் பயன்படுகின்றது. தமிழர்கள் மறைந்த கும ரிக் கண்டத்தில் (லெமுரியா) தோன்றியதால் தமிழும் அக்கா லத்திலேயே ஏறத்தாள 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன் றியிருத்தல் வேண்டும் என்பர், மொழியறிஞர் தேவநேயர் பாவாணர். எனினும் தமிழ் மொழியின் தொன்மை தமிழரின் நாகரீகத் தொன்மை போல் முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமை மிக்கது, தமிழ் இல்லாத காலம் இத்தரணியில் இல்லை என்பதே அறிஞர்களின் முடிவாகும். உலகின் முதன் மொழி யாக அல்லது உலகின் முதல் தோன்றிய சில மொழிகளில் சிறந்த ஒரு மொழியாகவும் உயர்ந்த மொழியாகவும் தமிழ் விளங்குகிறது. உலக மொழி ஆராய்ச்சியாளர் சிலர் 'தமிழ் மொழியே உலகின் முதன் மொழி எனக் கூறுவர் எனினும் சிலர் இலத்தீன் சீன மொழிகளுக்கு முந்திய மொழி எனக் கூறுவர் வேறு சிலர் இலத்தீன் கிரேக்க சீன மொழிகளோடு ஒத்த மொழி' எனக் கூறுவர். அம்மூன்றில் எது உண்மையாக இருந்தாலும் அது தமிழின் தொன்மைச் சிறப்பை காட்டுவ தாகவே இருக்கும். அத்துடன் இன்றைய புத்துலக நாகரீக மொழியாக தொடர்ந்து இளமை நலத்துடன் வாழ்ந்து வரு கின்றது, இதனால் அஃது இன்றைய உலகில் வளமுடைய ஒரே உயர் தனிச் செம்மொழியாய் விளங்குகிறது.



நம் தமிழ் மொழி செந்தமிழ், பைந்தமிழ், அந்தமிழ், அருந்தமிழ், இன்தமிழ், நற்றமிழ், தண்டமிழ் இந்தமிழ், தேன்தமிழ், நறுந்தமிழ் வண்டமிழ், முத்தமிழ், கன்னித்தமிழ், என்றெல்லாம் போற்றப் பெறுகின்றது அது தொன்மையும் முன்மையும், தாய்மையும் தூய்மையும், இளமையும் வளமை யும், உண்மையும் தண்மையும், கனிமையும் இனிமையும், நிறைந்து விளங்குவதாகப்பெருமை பேசப்பெறுகிறது

சங்ககாலம் முதல் தற்காலம் வரை புலவர் பெருமக்கள் தமிழின் மேன்மையைத் தங்கள் கவிதைகளில் ஆங்காங்கே சுட் டிச் செல்கின்றனர். தமிழ் என்றால் இனிமை என்று பொருள் தஞ்சவாணன் கோவை ஆசிரியர், பொய்யாமொழிப் புலவர் ''தெருந்தோறும் இனிதாம் செந்தமிழ்'' என்றார். மாணிக்க வாசகர் திருக்கோவையாரில் ''உயர் மதில் கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்'' என்றார் ''இனிமையும் நீர்மையும் தமிழ் என லாகும்.'' என்று பிங்கள நிகண்டு பகர்கிறது ''இன்றமிழ் இயற்கை இன்பம்'' என சீவக சிந்தாமணியும் சிறப்புடன் சுட்டிக் காட்டுகின்றது ''என்றுமுள இனிய தென்தமிழ்'' என்று களி கூறப் பாடினார் கம்பர். 'யாம் அறிந்த மொழி களிலே தமிழ் மொழி போல் இனிதாவதொன்றைக் காணோம் என்றும்' 'தேமதுரை தமிழோசை' என்றும் பாரதியார் பாராட் டினார் 'பாலோடு தேன் பழம் இவைகள் உண்ண இனித்திடு மாம் ஏலநினைத்தாலும் இனிப்பாய் தமிழ்த் தாயே' என்றார் மற்றொரு புலவர். ''இனிமைத் தமிழ் மொழி எமதென்றும் தமிழுக்கு அமுதென்று பெயர்'' என்றும் பாடிய பாவேந்தர் பாரதிதாசன் தமிழின் தொன்மையைத

'திங்களோடும் செழும் பருதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்களோடும்
பொங்குகடல் இவற்றோடும் பிறந்த தமிழ்'' என்றார்,

பாட்டுக்கொரு புலவர் பாரதி

தொன்று நிகழ்ந்த தனைத்தும்
அறிந்துள தொல்புவி வானவர்களும் - இவள்
என்று பிறந்தவள்? என்றறியாத
இயல்பினள் எம் தமிழ்த்தாய்'' என்றார்.

காவிரிப் பூம் பட்டினத்தில் நிலைத்து நின்று வாழும் தமிழ் மக்களைப் ''பதியெழு அறியாப் பழங்குடியினர்'' என இளங்கோவடிகள் கூறினார்.

அகிலத்தின் மூத்த மொழியாய்த் தமிழ் திகழ்ந்தமையாலும், இந்தியா முழுவதும் பேசப்பட்டு வந்தமையாலும், தான் உலகத்தின் பழமை மொழிகள் பலவற்றிலும் தமிழ் மணம் வீசுவதைக் காண்கின்றோம் கி. மு. 10ஆம் நூற்றாண்டினனாகிய அரசன் சொலமனுக்கு மயில் தோகை, யானைத் தந்தம் போன்றவை தமிழ் நாட்டில் இருந்து சென்றன.

தோகை துகி ஆகிய தமிழ்ச் சொற்கள் ஈப்ரு மொழிகளில் 'துஞ்சி மயில் இறகு'', என்று திரிந்து வழங்கலாயின. சந்தனம் அரிசி, என்னும் சொற்கள் கிரேக்கத்திலிருந்து பின் ஆங்கிலத் ('Sandle wood, Rice,) எனவழங்குகின்றன. அக்காலத்தில் கிரேக்க நாட்டுக்கு அனுப்பப்பட்ட இஞ்சியும், பிப்பிலியுமே சிக்கிவெரசு பெப்பரி என்றுகிரேக்க சொற்களின் தோற்றத் திற்கு மூலகாரணமாய் இருந்திருக்கின்றன கிரேக்க அரசன் அகஸ்டஸின் அவைக்குப் பாண்டியன் தன் தூதுவனை அனுப்பினான் எனவே தமிழர்கள் என்று பெருமையோடு பெருமிதத் தோடும் தம்மை நினைக்கின்ற அனைவரும் தம்முடைய மொழியின் பண்டைய பாரம் பரிய நிலையானது எப்படி இருந்தது எப்படி நலிந்தது? எப்படி சிதைவுற்றது? என்பதை தெளிவாக அறிந்து பழம்பெரும் நாகரீகங்களுக்கு இணையான நாகரீகத்தை கொண்டிருந்த நாம உலகின் கண் மறைக்கப் பட்டுள்ள கொடுமையை சதியை கண்டு கொள்ளல் வேண்டும்.

## தமிழுக்கு சீரழிவுகள்

சங்க காலம் வரையில் மிகச் செழிப்பாக வளர்ந்திருந்த நம் தாய்மொழியாகிய தூய இன்பத் தமிழ் அதற்குப் பின் வர வர ஆரியரின் வேத மதத்திலும் சமண பௌத்த மதங்களாலும் தாக்குண்டு படிப்படியாக சீர்கெட்டது ஆரியரின் வேத மொழியும், வட திராவிட மொழிகளான பராக்கிருதமும் பாலியும் கலந்து செய்யப்பெற்ற சமற்கிருதமும் சமய நோக்குடன் தமிழ் மொழியோடு (பலவாறு கலக்கப்பெற்று, அத



னைச் சீர்குலைத்தன. அதனால் தமிழ் மொழி பல்வேறு வகையாகத் திரிபுற்றுச் சிதைந்தது, பழந்தமிழில் வரைவின்றி சமற்கிருதம் புகுந்ததால் தான் வடுகர் நாட்டு மொழி தெலுங்கு, எருமை நாட்டு மொழி. கன்னடம், மலைநாட்டு மொழி மலையாளம், துளு முதலிய இருபத்திரண்டு மொழிகள் பிரிந்தன. தெலுங்கும் கன்னடமும், (1500, ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழில் இருந்து பிரிந்த தனி மொழியாகி விட்டன கேரளத்தில் கி. பி. பத்தாயிரம் நூற்றாண்டு வரை செந்தமிழ் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தது சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே மலையாளம் தனி மொழியானது அது மட்டுமல்ல மலையாள மொழி அன்புடனே நம்மை எச்சரிக்கின்றது

'சேரர் தமிழுக்கு நேர்ந்த கதி
செந்தமிழுக்கு நேர வேண்டாம்
சமற்கிருதத்தை தடை செய்யுங்கள்'

வேத ஆரியர்களும் தமிழ் மூல நூல்களைத் தம் மொழியாகிய சமற்கிருதத்தில் பெயர்த்தெழுதித் தம் மொழிக்கு ஏற்றம் தேடிக்கொண்டு தமிழ் மூல நூல்களை அழித்தனர். ஆரியக் கோட்பாடுகளாலும் அவரின் மொழி சமற்கிருதத்தாலும் சீரழிந்து. அல்லல்பட்டு அதிலிருந்து மீள பல வழிவகைகளைக் கண்டது இதன் தொடர்பாகவே தனித்தமிழ் இயக்கம் தமிழிசை இயக்கம் பகுத்தறிவு இயக்கம், சுயமரியாதை இயக்கம் எனபல இயக்கங்கள் தோன்றின, இந்த இயக்கங்கள் எல்லாம் தமிழர் வாழ்வில் தமிழ் ஒவ்வொரு துறை தோறும் வர வேண்டும் என பணியாற்றின தமிழ் மொழியில் முக்கிய நிகழ்வுகளான திருமணம், வழிபாடு, சாவு குழந்தைகளுக்கு பெயரிடுதல், செயலகங்களில் தமிழ்ப் பணி ஏன்? தமிழில் நடைபெற வேண்டும் என்பதை ஈண்டு காண்போம்.

## மனைவினையில் தமிழ்

துணைவனும் துணைவியுமாய் - கணவனும் மனைவியுமாய் வாழத் தொடங்கும் நிலைக்குத் திருமணம் என்று பெயர் திருவென்னும் சொல் அழகு, செல்வம், செம்மை, சிறப்பு முதலிய பொருள் பொதிந்த சொல்லாகும். சுருக்கமாகக் கூறின் கண்டோரால் விரும்பப் பெறும் தன்மை விளங்குமிடமெல்லாம் திருவும் பொலிகின்ற'' தென்று கூறலாம். மணமெனுஞ் சொல நறுநாற்றத்தை, நறுமணத்தை குறிக்கும்.

மணமென்பது மணமக்களின் உளமொத்ததாகும். மணந்து மகட்பெற்று நாட்டிற்கும் வீட்டிற்கும் நல்லன புரியச் சிறந்து நிற்பது மணப் பருவமேயாகும். எனவே, வாழ்வு முழுவதும் மணம் பெற்றுத் திகழ்வதற்கு ஏதுவான இந் நிகழ்ச்சியை திருமணம் என்று பெயரிட்டமை ஏற்புடையதாகும் மகிழ்தற்குரியதாகும், மாண்புடையதாகும்.

இக் காலத்து திருமணச் சடங்குகளின் நிகழ்வுகள் அக்காலத் திருமணத்தில் இருந்ததில்லை. 'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்று பாடினார் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை தமிழனைத் தலை நிமிர்ந்து நடக்கச் செய்வதே சங்க காலம் தான் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் மக்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த வாழ்க்கையை கற்பனைக் கலப்பின்றி படம் பிடிக்கும் அற்புதக் கண்ணாடியே சங்க இலக்கியம்.

பண்டைய தமிழ் நாட்டின் மண்ணையும் விண்ணையும் மக்களையும் மாக்களையும், பயிர்களையும் உயிர்களையும், மலையையும் கலையையும், அவற்றின் தோற்றத்தையும் ஏற்றத்தையும், வாழ்வையும் தாழ்வையும், நுட்பமாக நம் கண்முன்னே நிறுத்தி விந்தை புரிவது சங்க இலக்கியம். தமிழர்களின் களவிலும் கற்பிலும், ஊடலிலும் கூடலிலும், நகையிலும், பகையிலும், போரிலும், புகழிலும் வளத்திலும் வறுமையிலும், கொடையிலும் படையிலும் கோபத்திலும் குணத்திலும், அறமே முற்றிலும் ஆட்சி செய்ததை அறிவிப்பது சங்க இலக்கியம். எனவே சங்ககாலம் தமிழரின் பொற்காலம் என்பர் சான்றோர்

சங்ககால திருமணத்தை ஆராய்ந்த முனைவர். மா இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேராசிரியர் திரு. பி. டி. சீனிவாச ஐயங்காரின் தமிழர் வரலாறு என்ற நூலில் கூறியதை எடுத்துக்காட்டி தமிழர் திருமணத்தில் 1. எரியோம்பல் இல்லை 2. தீ வலம்வருதல் இல்லை 3. தட்சணை பெற புரோகிதர் இல்லை. இவை முற்றிலும் தமிழர்க்கே உரிய திருமணங்களாகும் எனச் சுட்டிக் காட்டியுள்ளார் அதனுடன் மணமக்களுக்கு மண நீராட்டலே சிறப்புச் சடங்காக இருப்பதாகவும், பலர் அறிய விருந்து நடத்தி மணமக்களை நீராட்டி, புத்தாடை உடுத்து அணிகலனை அணிவித்து மணமக்கள் இருவரையும் மணப்பந்தலில் இருக்க வைத்துப் பலர் அறியச் செய்தலே திருமணச் சடங்கின் முக்கிய வினை எனக் கூறியுள்ளார்.



திருமணத்தைப் பற்றி முனைவர் சஞ்சீவி கூறுவதும் ஏற்றிப் போற்றத் தக்கதாகும்,

அவர் கூறுகின்றார்:

01 சங்ககாலத் திருமணம் இயற்கையையும் பகுத்தறிவையும் ஒட்டியது.

02 குழந்தைத் திருமணம் இல்லை.

03 திருமணத்தில் சாதி வேற்றுமை இல்லை.

04 வடமொழி மந்திர வழிபாடு இல்லை.

05 காப்பியக் காலத்தில் தான் ஆரிய முறைகள் ஆதிக்கம் பெற்றன.

06 நாளடைவில் ஆரிய முறைகள் நாட்டுப்புற மக்களின் வாழ்வையும் ஊடுருவத் தொடங்கியது.

07 தாலி கட்டும் முறை தமிழருடையது (கி. பி. 8ஆம் நூற்றாண்டிலிருந்து இடம் பெற்றிருக்கிறது)

தமிழர் திருமண முறைகளில் இரு வேறு வகைகளில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர்கள் மறைமலை அடிகளாரும். பெரியாரும் ஆவார்.

தமிழ் இலக்கிய வரலாற்றை வரைந்த முனைவர் மு. வரதராசன் அவர்கள்

''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளர் நகர்ப்
பெண்ணி நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே''

என்ற தேவாரம் சைவர்களின் திருமணங்களில் மகிழ்வுடன் ஓதப்பட்டதாகக் கூறியுள்ளார்

புரட்சிக் கவிஞன் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் ''வைதீக மணத்தை மெய்யென ஒப்பிட்டால் தமிழர் பண்பு

தலை சாயாதோ'' 'மணவாழ்வு தொடர்கையில் நடுவில் சுடு நெருப்பா'' என வைதீக மணத்தை சாடியுள்ளார்.

ஆயிரக்கணக்கான திருமணங்கள் பேரறிஞர் அண்ணா, தமிழ்த் தென்றல் திரு.வி.க., கலைஞர் கருணாநிதி, பாவேந்தர் பாரதிதாசன், நாவலர் சோமசுந்தரப் பாரதியார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதன் தலைமையில் நடைபெற்றுள்ளன. முத்தமிழ் காவலர் தலைமையில் மட்டும் 600க்கு மேற்பட்ட திருமணங்கள் நடைபெற்றுள்ளன. இவர்களின் உயர்வான கொள்கை தமிழர் சடங்குகள் தமிழிலே நடைபெறுதல் வேண்டும். என்பதே.

## வழிபாட்டில் தமிழ்

தமிழர்களுடைய சமயம் சைவ சமயம் என்பது வரலாறு காட்டும் உண்மை. இதை மறுப்பவரோ மறைப்பவரோ இல்லை பழந் தமிழன் கடவுளை வழிபட்டான். கடவுள் என்பது இறவா வாழ்க்கைப் பெருமையுடையது. பிறந்து நிலை வேறு கொண்டு இயலுவன தெய்வங்கள். தமிழன் வணங்கிய கடவுள் பிற வாயாக்கைப் பெரியோன். ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெருஞ் சோதிக்கு ஓர் நாமம், ஒருவம் இல்லாதவனுக்கு, உலகமெல்லாம் உணர்ந்து ஓதுதற்கரியவனுக்கு, நிலவுலாவிய நீர்மலர் வேணியனுக்கு ஒரு பெயர் வைத்தான்.

அப்பெயர் தான் சிவம், சிவனைப் போற்றினால் மங்கலம் உண்டாகும். என்பது தான் பொருள் சிவன் மக்கள் மனக் கோவில் எல்லாம் தாண்டவம் செய்கிறான் என எண்ணினர் எம் முன்னோர். ஆனந்தத் தாண்டவம் ஆடும் ஆண்டவனிடமிருந்து பிறந்தது ஒரு நாதம். அது ஏழிசையாய் இசை மயமாய் இருக்க அந்த நாதத்திலிருந்து பிறந்தது மொழி. அது நமது தமிழ் மொழி என்றனர் சிவபெருமான் தமிழை அகத்தியர்க்கு உணர்த்தினாராம். இதை 'கயிற்புரை திறக்கடவுள் தந்த தமிழ்'' என்பதாலும். 'ஆதியில் தமிழ் நூல் அகத்தியற்கு உணர்த்திய மாதொரு பாகன்' என்பதாலும் அறியலாம்.

சைவநெறி கடவுளுக்கு எட்டுக்குணங்களைக் கூறுகிறது அந்த எண் குணங்களாவன இயற்கை உணர்வினாதல், முற்றுணர்தல், இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை என்பன. இதை வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழி வகுத்த வள்ளுவர்,



''கோளில் பொறியின் குணமிலவே எண் குணத்தான்
தாளை வணங்காத் தலை'' என்றார்

தென்னாட்டில் சிவனாகக் காட்சி தரும் அவனே எந்நாட்டவர்க்கும் இறைவனாக காட்சி தருகின்றான் இதையே மாணிக்க வாசகரும் 'தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என்று கூறுகின்றார் சோதியாய்த் திகழும் போது கடவுளை சிவம் என்கிறோம். எங்கும் பரந்து நம்மை அன்னையைப்போல் காக்கின்றபோது சக்தி என்கிறோம்; உரிமையுடன் நமக்கு வந்து உதவும் போது முருகன் என்கிறோம்.

சங்க காலத்தில் இறை வழி பாட்டுக்கு குருக்களோ புரோகிதர் இருக்கவில்லை, சமஸ்கிருதத்திலும் வழிபாடு நடைபெறவில்லை வழிபாடு என்பது இறைவனை வணங்கும் போது கை பூவை எடுத்து அவன் திருவடியில் தூவ அவன் திருப்பெயரைச் சொல்ல உள்ளமும் பூ வழிபாட்டில் ஒன்றி வழிபடுதலாகும், பூசையில் சிறந்தது பூதூவி வழிபடுதல், அந்த பூதூவி வழிபடுதலில் சிறந்தது திருவடிக்கு பூதூவுதல், அதை அன்புடன் செய்ய வேண்டும், அன்பு அகத்தில் நிகழ்வது, புறப் பூவை இடுவதனால் பூசை நிரம்பாது,

அகப்பூவையும் இட வேண்டும். புறப்பூவை மட்டும் இட்டால் அது அரைப்பூசையாகவே முடியும். இதை மாணிக்க வாசகர்.

'அவனருளாலே அவன்தாள் வணங்கி'' என்றும்

''அருச்சனை வயலுள் அன்பு வித்திட்டுத் தொண்டர் உழவர் ஆரத்தந்த அண்டத் தரும்பெறல் மேகன் வாழி'' என்றும் கூறினார். வான் மறை தந்த வள்ளுவர்.

''தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது'' - என்றார்,

கிறித்தவ சமயத்தினர் தொடக்கத்தில் லத்தீன் மொழியில் வழிபாட்டை நிகழ்த்தினர் பின்பு சமயத்தை வளர்ப்பதற்கு மொழி தடையாக இருக்குமெனக் கருதி மக்கள் பேசும் மொழியிலேயே வழிபாட்டை நிகழ்த்தினர் தமிழ் மக்களுக்கு தமிழில் இயலுடன். இசையுடன் வழிபாட்டை நிகழ்த்துகின்றனர் சைவ சமயத்தினர் சைவமும் தமிழும் இரு கண்கள் எனக் களிக்கின்றனர் இறைவன் தமிழையே வடிவமாகக் கொண்டவன் என குதூகலிக்கின்றனர். 'மூத்ததமிழால் வைதாரையும் வாழவைப்பான் முருகன்' என்று பக்தர்கள் பாடிப் பரவசமடைகின்றனர். தமிழ் என்றுசொல்லும் தோறும் நினையுந்தோறும் இன்பம் புது மெது பெருக்கெடுத்து ஓடுகிறது என்றும் கூறுவர் 'தமிழ் என்பது சிவம், இனிமை' என்பது பேரிசைச் சூத்திரம் இறைவனையே தமிழ் என்னும் சொல்லால் குறிப்பிடுகின்றார் திருமங்கையாழ்வார் ஆழ்வார்களும், நாயன்மார்களும் அன்பு கனிந்து நெக்கு நெக்குருகி உள்ளொளி பெருகப் பாடிய தேவாரங்கள். திருவாசகங்கள் இருக்க நாம் சமற்கிருத மொழியில் வழிபடுவது இறையுணர்ச்சியை வளர்க்குமா? தமிழில் வழிபாடு நடைபெறாததற்குக் காரணம் தமிழ் நாட்டில் பிறந்து தமிழிலே வீட்டில் பேசி, தமிழராகவே வாழ்ந்த வடமொழி அறிஞர்களே. இவர்கள் தேவாரம் திருவாசகம் முதலான தமிழ் நூல்களை படிக்காமல் புறக்கணித்தார்கள். சோழ மன்னர்கள் மானியம் பலவும் அளித்து பெருமைப்படுத்தி போற்றி வந்த தேவாரப் பாடல்களுக்கு கோயில்கள் இடம் இல்லாமல் செய்து வந்தார்கள். ஆதியாய் அநாதியாய் அவதரித்த செந்தமிழை மாருதத் தமிழை உயிருக்கு நேரான இனிய தமிழை. நீச பாசை என்று ஒதுக்கி வடமொழி மட்டுமே தேவ பாசை என்றும் உயர்த்திப் பேசினார்கள். பேசுகிறார்கள்.

கல்லைக் கடலிலே மிதக்கச் செய்தது கன்னித் தமிழ் நீற்றறையில் தென்றல் நிலவியது நித்திலத் தமிழால், சூலை நோயை சுக்கு நூறாக்கியது சுந்தரத் தமிழால் மணிக்கதவு திறக்கப்பாடியது மாணிக்கத் தமிழால் இத்தனை அற்புதம் செய்த அன்னைத் தமிழின் ஆற்றல், சிறப்பு அனைத்தையும் அழிய விடுவது தான் முறையா? நாம் நமது தாயை நமது மொழியை உதாசீனம் செய்யலாமா?

தமிழர் கோவில் வழிபாடு தமிழிலே நடத்தப்படல் வேண்டும். என உயிர்ப்பான கொள்கைகளையுடைய மறை



மலை அடிகளார் இதற்காக 10-11-1940 இல் பச்சையப்பன் மண்டபத்தில் நிகழ்ந்த அனைத்து இந்திய தமிழர் மத மாநாட்டை கூட்டலாம் தமிழுக்கும் சைவத்திற்கும் உழைத்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் திருவளக்கில் உள்ள கோயில்களில் தமிழில் வழிபாடு நடைபெறுவதை மறைக்கவோ மறுக்கவோ முடியாது இவரின் தலைமையில் சென்ற 68 அறிஞர்களின் கோரிக்கைக்கு இணங்க மதுரை அங்கயற்கண்ணி (மீனாட்சி அம்மன் கோவிலில் தமிழில் வழிபாடு தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ் நாட்டில் உள்ள மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி கோயில் சாத்திரங்களுக்கு முற்றிலும் மாறுபட்டது. கோவில் கட்டிடம் கூட மதவிதிகளின்படி கட்டப்படவில்லை. இதுவரை குடமுழுக்கு நடத்தவில்லை, தமிழில் அர்ச்சனை செய்கிறார்கள். ஆண்டு தோறும் நூற்றுக்கணக்கான திருமணங்கள் தமிழில் மறை மொழிகள் ஓதி நடைபெறுகின்றன. இக் கோவில் தான் தமிழ் நாட்டில் மிகுந்த வருமானத்தை அளிக்கும் கோவிலாக வளர்ந்து வருகின்றது திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களால் சென்னை ஏகாம்பரேசுவரர் கோவிலில் 12-08-71 ல் தமிழில் மலர் வழிபாடு தொடங்கி வைக்கப்பட்டது

பிணவினையில் தமிழ்

சைவ சமய மக்களின் குடும்பங்களில் மாண்டபின் நடைபெறும் பிணவினைச் சடங்குகளிலும் அதைத் தொடர்ந்து ஆண்டு தோறும் நடைபெறும் நீத்தார் கடன் சடங்குகளிலும் புரோகிதர்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றார்கள் மாண்டபின் சாவு மனைகளில் நாயன்மார்களின் நற்றமிழ் தேவார திருவாசகங்கள் ஓதப்படுகின்றன எனினும், இறுதிமரியாதை உரை நிகழ்த்துவதில்லை இவ்வுரை மக்கள் மத்தியில் தொண்டு செய்தவர்களுக்கு அஞ்சலி உரையாக நடத்தப்படுகின்றன. இந்தோனேசியாவில் எல்லா சாவு மனைகளிலும் வழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுப்பர் திரு. ஆத்மசோதி முத்தையா அவர்கள் இந்தோனேசியாவில் இந்துக்களின் சாவு மனைகளில் நீண்ட இறுதி மரியாதை உரை நிகழ்த்தப்படுவதாக "இந்தோனேசியாவில் 2 வருட அனுபவம்" என்ற நூலில் கூறியுள்ளார் அந்த உரையின் ஒரு பகுதி

" அணுமுதல் இவ்வண்ட சராசரம் அனைத்திலும் சர்வ வியாபியாகச் சாரிந்தியங்கும் சச்சிதானந்த சோதியின் அதி மர்மமும் அற்புதமுமான நியதியில் சடப்பொருட்கள்

அனைத்துமே பிறப்பென்னும் விதிக்கு இலக்காக வேண்டியிருப்பது போல் இன்று சாவு என்னும் மர்மமான வாயிலில் நுழைந்து மறைந்துபோன முதியவரின் - நண்பரின் - இளைஞரின் அம்மையாரின் - சகோதரியின் - குழந்தையின் சடலம் இதோ நம்முன் இருக்கிறது''

''நம்மோடு நம்மைப்போல் உடல் தாங்கி உலகில் உலவிய இவரை நாம் இனிக் காணப்போகின்றோமில்லை வாழ்க்கையின் அந்தத்தில் – நடுவில் தொடக்கத்தில் திடீரென அழைத்துக் கொள்ளப்பட்டார் அனைவற்றையும் மறந்தார் இவ்வுடலைத் துறந்தார் அவருடைய வாழ்க்கைத் தீபம் அணைந்து போயிற்று

எனவே மனம்போன போக்கிலும், ஆணவத்தின் அலங்கோல ஆட்சியிலும், ஆசைகளின் மோசவலையிலும் வஞ்சகப் பேய்களாய் பொய், காமம், கொலை, களவு, கள் என்னும் பஞ்சமா பாதகங்களாலும் மயங்கி விழாமலும் நெறி பிறழாமலும், ஒழுக்கம் தவறாமலும், அன்பு தயை, கருணை, பக்தி, விசுவாசம் முதலிய சீரிய குணங்கள் சமமும் உத்தமர்களாகவும் வாழ்க்கை நடத்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் ஒவ்வொருவரும் உறுதி செய்து கொள்வது இன்றியமையாததாகும்''

சாவுச் சடங்குகளைத் தொடர்ந்து ஆண்டு தோறும் தென்புலத்தார் கடன் என்ற பேரில் நினைவு நிகழ்வுகள் நடைபெறுகின்றன தென்புலத்தார் என்பது ஒவ்வொரு குடியிலும் இறந்தமுன்னோர் இவர்களை நினைத்து வழிபாடு செய்தல் ஒவ்வொருயில் பிறந்தார் கடனாகும் இது அவரவர் நம்பிக்கைக்கும் அறிவுக்கும் ஆராட்சிக்கும் வேறுபடும் மனிதன் கிழிந்தாடைகளை நீக்கி விட்டு புதிய ஆடைகளை உடுத்திக் கொள்கின்றான் இவ்வாறே உயிர் சாவு அடைந்த உடனே உடலை விட்டு வேறோர் உடலுக்குள் புகுகிறது இது பகவத் கீதையில் கண்ணன் வாக்கு எனக் கூறுவர் நாம் புதிய ஆடைகளை மேலாக சுற்றிக்கொண்டு தான் உடுத்தியுள்ள கிழிந்த ஆடையை அல்லது அழுக்கடைந்த ஆடையை நீக்குதல் வழக்கம் அதாவது, உயிர் பழைய உடலை விட்டு நீங்குவதும், புதிய உடலில் நுழைவதும் ஒரே சமயத்தில் நிகழ்வன இதே கருத்தினைத் தான் வையத்துள் வாழ்வாங்கு வாழ வான்மறை தந்த வள்ளுவன்



''உறங்குவது போலும் சாக்காடு உறங்கி''
விழிப்பது போலும் பிறப்பு — என்றார்.

உறக்கத்தின் இறுதியும், பிறப்பின் தொடக்கமும் இணைந்து நிகழ்வன. எனவே இறந்தவர் பெயரால் புரோகிதருக்கு வழங்குவது வீண் என்பது வெளிப்படை. முன்னோர்களை அவர் பின்னோர் நினைத்து வழிபட்டு, அவர் மரபினர் என்ற பெயரை நிலைநாட்ட வேண்டுமாயின், இறந்த தாய்தந்தையரை ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்ற ஆன்றோர் வாக்குப்படி தெய்வமாக வழிபட்டு அவர் நினைவை மக்களுக்குப் பயன்படுமாறு பயனுள்ள செயல்களைச் செய்து நினைவு கூர வேண்டும்.

மக்களை கடவுளாக மதித்து அன்பு செய்யக் கற்றுக் கொடுப்பது சமயம், அறிஞர்கள் மனிதனை 'சமுதாயப் பிராணி'' என்று சொல்கிறார்கள் ''பிறருக்கென முயல்வோர் உண்மையான உலகம் உண்டு 'என்று தமிழ்மன்னன் பேசுகிறான், ''தனக்கென வாழாபிறர்க்குரியாளன்'' என்று அகநானூறு கூறுகிறது பிறருக்கு நன்மை செய்வதிலே தீமை வரினும் ஏற்றுக் கொண்டு நன்மையே செய்கின்ற பண்பாட்டைத் தானே திருவள்ளுவர் 'மருந்து மரம்'' என்ற உவமையால் விளக்குகிறார், மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனப் பறைசாற்றிய திருமூலர்,

படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே,'' என்றார்.

அதாவது கோயில் படமாக உள்ள கடவுளுக்கு ஒன்று தந்தால், நடமாடும் கோயில்களாக உள்ள உயிர்களிடத்தில் உள்ள கடவுளுக்கு அது பயன்படுவதில்லை நடமாடும் உயிர்களிடத்தில் உள்ள கடவுளுக்கு ஒன்று தந்தால், படமாக உள்ள கடவுளுக்கும் அது சென்று சேரும் என்பது கவனிக்கத் தக்கது

## பெயர்களில் தமிழ்

தனித்தமிழ்த் தந்தை மறை மலை அடிகள் பேரறிஞர் அண்ணா, தமிழ்த் தென்றல் வி. க போன்ற தமிழ்ப் பேரறிஞர்

களின் முயற்சியால்தமது பிள்ளைகளுக்குத் தனித் தமிழ்ப் பெயர்
வைத்தோம் ஆனால் அண்மைக் காலத்தில், தமிழைத் தம்
தாய்மொழியாகச் சொல்லிக்கொண்டு காலில் போட்டு மிதித்து
விட்டால் "அப்பாடா அம்மாடி என்று சொல்லி வரும் தமி
ழர்களில் ஒரு பகுதியினர் தமிழில் பட்டம் பெற்ற ஒரு பகுதி
யினர் தொழிலுக்காக தமிழில் தேர்வு எழுதும் ஒரு பகுதியினர்
தமிழ் தங்கள் தாய் மொழி என்பதைச் சிறிதும் சிந்திக்காமல்
பிற மொழிப் பெயர்களை தம் குழந்தைகளுக்கு வைக்கின்ற
னர். இவர்கள் கூறுவது "மொழி ஒரு ஊடகம். எனவே
பெயர் வைப்பது எமது விருப்பம். தனிமனித உரிமை". ஒரு
வர் விருப்பம் போல் எங்கும் நடக்கலாம். ஆனால் போக்கு
வரத்து மிகுந்த தெருவிலும் அப்படி நடக்க முடியாது நடந்தால்
மகிழுந்து (கார்) எங்களை பிண வண்டிக்கு அனுப்பி விடும்.
மொழியை, இனத்தை, நாட்டை பண்பாட்டை, சில ஒழுங்குக
ளைப் பேணுவதற்கு சில சட்டங்களும், கட்டுப்பாடுகளும் தேவை
கட்டுப்பாடற்ற விடுதலை என்பது காட்டில்; நாட்டில் அன்று

நரேஷ், சுரேஸ் ரஜினி, கமல், விதுஷா, ரஞ்ஜின், ஷாளஸ், லக்
ஷனா, அனுஷா, பிரகாஷ், ஷாளினி கிரிகாந்றிஷான், நிரோஷன்,

என்று பொருள் புரியாத இந்தப் பெயர்களை நாம் எதற்கு
வைத்துக் கொள்ள வேண்டும் ஷா, ஜா, ஷ, ஸா, ஹா
போன்ற எழுத்துக்களெல்லாம் தமிழ் எழுத்துக்கள் இல்லை
தமிழனைச் சுடுகாட்டிற்கு அனுப்பத் தமிழில் நுழைந்த எழுத்
துக்கள். அப்படியானால் கிருஸ்ணன், சரஸ்வதி என்பதை எப்
படி எழுதுவது என்று கேட்கலாம், கிருட்டினன், சரசுவதி என்று
தான் எழுத வேண்டும். இந்திக்காரன், தொல்காப்பியன் என்
பதை தோல்காப்பியன் என்றுதான் எழுதுவான் அதற்காக
'தொ'' ஒலி இல்லையேயென அவன் கூப்பாடு போடவில்லை
ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனி ஒலி அமைப்பு உண்டு அந்த
ஒலி அமைப்பைச் சிதைத்தால் மொழி சிதைந்து விடும்
நோய் நொடிகள் இல்லாத வாழ்க்கைக்கு மக்கள் நுகர்கின்ற
எல்லாமே தூயனவாய் இருக்க வேண்டுமென விரும்புகின்றோம்.
ஆனால் இதில் மொழியை மட்டும் விலக்கி விடுகிறோம். நாய்
களுக்கு வைத்துவிடும் பெயர்போலல்லவா நாம் பெறும் குழந்
தைகளுக்கு பெயர் வைக்கிறோம் தொழில் பெறுவதற்காக
தமிழில் தேர்வு எழுதுகிறோம். வயிறு வளர்க்க தாய்மொழி
பெயர் வைக்க இன்னொருமொழியா?



## செயலகங்களில் தமிழ்

தமிழகத்தில் 1956 ம் ஆண்டிலேயே தமிழ் ஆட்சி மொழி என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தும், இன்றுவரை அது முழுமையாக செயல்படுத்தப்படாமல் உள்ளது. பல துறைகளில் பத்து விழுக்காடு அளவுக்குக் கூட தமிழ் நடைமுறைப் படுத்தப்படாமல் இருக்கின்றது, தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை முழுமையாக செயற்படுத்தக்கோரி 95 வயதிலும் தமிழ் காக்கும் ஆர்வம் காரணமாக மூத்தமிழ் காவலர் கி. ஆ. பெ விசுவநாதன் தலைமையில் சென்னைத் தமிழ்ச் சங்கத்தினர் சென்னைக் கோட்டை முன்பு மறியல் செய்துள்ளார்கள், இலங்கையிலும் தமிழுக்கு ஆட்சிமொழி உரிமைகோரி யூன் 56ம் ஆண்டு தொடங்கிய போராட்டம் பொது மக்களினதும் வீர மறவர்களினதும் தியாகத்தால தமிழும் ஆட்சிமொழியாகப் பெற்றுள்ளது, முற்றும் முழுதாக தமிழைச் செயற்படுத்துவதற்கு தமிழரே ஒத்துழைப்பதில்லை அரச மேலாளர்கள் திணைக்களத் தலைவர்கள். அதாவது அஞ்சல்களுக்கு ஆவணங்களுக்கு ஒப்பமிடும் மேலாளர்கள் தமிழ் அல்லாத அஞ்சல்களுக்கு ஆவணங்களுக்கு ஒப்பமிடுவதில்லையெனத் தீர்மானித்து நடந்து கொள்வார்களானால் தமிழ் நடைமுறைப்படுத்துவதை மகிழ்வுடன் பார்க்கலாம். தமிழ் செயல்படுத்தப்பெறுவது தமிழரின் கையிலேயே உள்ளது.

## செய்ய வேண்டுவன

### வழிபாடு

கோவிலில் உடனடியாக என்ன செய்ய வேண்டுமென்பதை சைவ சமயம் என்ற நூலை வரைந்த முனைவர் மா, இராச மாணிக்கனார் கூறுவது ஏற்றுப் போற்றத்தக்கதாகும் அவர் கூறுகிறார்,

சைவக் கோவில்களில் தேவாரப் பாடசாலைகள் தேவை

பெருமாள் கோவில்களில் நாலாயிரப் பிரபந்தப் பாடசாலை தேவை, வழிபாடு தமிழிலேயே நடைபெறுதல் வேண்டும்.

02 குருக்கள் தகுதி வரையறை செய்யப்படல் வேண்டும். பத்தாம் வகுப்புத் தேறியவர்களுக்கு பல்கலைக்கழகத்தின் சார்பில் 4 ஆண்டுகள் வரலாறு சமயம் ஓவியம், சிற்பம் நடனம், இசை கட்டடக் கலையில் ஓரளவு பயிற்சி அளித்து தேர்வு வைத்துப்பட்டம்தரல் வேண்டும் அப் பட்டதாரிகளே குருக்களாக அமைய வேண்டும் அந் நிலையில் தான் கோவில்கள் சாத்திரிய முறையில் விளங்கும் யாவும் தூய்மையாக இருக்கும் இதை அறிஞர் உடனே செய்ய வேண்டும்.

03 கோவில் இயக்குனராக வருபவர் பல்கலைகளிலும் புலமை உடையவராக இருத்தல் வேண்டும்

04 இவை அனைத்திற்கும் மேலாக நம்நாட்டுக் கோவில்கள் நம்நாட்டுச் சமயங்கள் நம்நாட்டுக் கலைகள் இவற்றைப் பாதுகாத்தலும் போற்றுதலும், வளர்த்தலும் நமது கடமை என்பதை உளமார உணர்ந்து பாடுபடும் ஒருமைப்பாடு குருக்களிடமும் பிறகோயில் அலுவலர்களிடமும் இருத்தல் வேண்டும்,

## திருமணம்

மணமக்கள் இருவரையும் மணப்பந்தலில் இருக்க வைத்து பலர் அறியச் செய்தலும் இருவரும் உறுதிமொழி எடுத்தலும், தமிழ் அறிஞர்களைக் கொண்டு அல்லது ஊர்ப் பெரியவர்களைக் கொண்டு மணமக்களுக்கு அறிவுரையும், அறவுரையும் கூறுதலும் தமிழில் நடைபெறும். திருமணத்தில் இன்றியமையாததாகும். இந் நூலில் இணைக்கப் பெற்றுள்ள நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப தமிழ் மக்கள் தங்கள் திருமணங்களை தமிழில் செய்ய முன்வரவேண்டும்.

## பெயரிடுதல்

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் முயற்சியால் வாணிப நிலையங்களின் பெயர்களெல்லாம் தமிழில் இருப்பதைக் கண்டு களிப்புறுகிறோம் எனவே முயற்சி தான் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு அடிப்படை முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் இடுகுறி தொடுகுறி எண் சோதிடம் பார்த்தாலும்



தாம் பெற்ற குழந்தைகளுக்கும், வாணிப நிலையங்களுக்கு தமிழில் பெயர் வைக்க ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.

## சாவு

01 சாவு இல்லத்தில் தமிழ் நால்வர் தந்த தேவார திருவாசகங்களை உள்ளம் உருகப் பாட வேண்டும்.

02 உள்ளத்தை தொடும் வகையில் இறுதி மரியாதை உரை நிகழ்த்த வேண்டும்.

03 31 நாள் நிகழ்விலும் (அந்தியேட்டி) ஆண்டு தோறும் நடைபெறும் நினைவு நிகழ்விலும் பொருட்செல்வம் உள்ளவர்கள் இறந்தவர் நினைவாக பல்கலைக்கழகங்களுக்கும் சைவமடங்களுக்கும், அநாதை இல்லங்களுக்கும் பாடசாலைகளுக்கும் ஊனமுற்றோர் நிலையத்திற்கும் அல்லது சமூக அபிவிருத்தி நிறுவனங்களுக்கும் நிதி அளிக்கலாம் அல்லது மண்டபம் அமைத்து அளிக்கலாம் நிதி குறைந்தோர் நூல் நிலையங்களுக்கு பொத்தகங்களை அன்னாரின் நினைவாக வழங்கலாம்.

## பணிமனைகள்

01 தமிழன் தமிழனோடு தமிழில் உரையாட வேண்டும். கடிதத் தொடர்புகளை தமிழிலேயே வைத்திருத்தல் வேண்டும் என்ற உறுதிப்பாடு ஒவ்வொரு தமிழனுக்கும் இருத்தல் வேண்டும்.

02 செயலகங்களில் படிவங்கள் எந்த மொழியில் இருந்தாலும் தமிழர்களாகிய நாம் படிவங்களை தமிழில் நிரப்ப வேண்டும்.

03 ஒப்பமிடும் மேலாளர்கள் தமிழ் அல்லாத அஞ்சல்களுக்கும் ஆவணங்களுக்கும் ஒப்பமிடுவதில்லை என தீர்மானித்து நடந்து கொள்வார்களாயின் ஒவ்வொரு அரச செயலகங்களிலும் தமிழ் பயன்படுத்துவதை கண்டு கொள்ளலாம்

## முடிவுரை

எங்கும் எதிலும் தமிழ் வளர்க உறுதி கொண்ட உள மாற்றமே தேவை இந்த இடத்தில் அமைதியானவர், ஆர்ப்பாட்ட மில்லாதவர் என்று பெயரெடுத்த முனைவர் மு. வ. அவர்களின் கருத்தை அப்படியே தருகிறேன். மறுபடியும் செயலாற்ற முன் வருவோம்.

01 திருக்குறள் ஓதியே திருமணம் நிகழ வேண்டும் தமிழ் நாட்டுக் கோயில்களில் உத்தமர்களின் தமிழ்ப் பாட்டு முழங்க வேண்டும். அதிகாரிகள் தமிழை மதிப்பவர்களாக இருக்க வேண்டும். ஆளுநர் தமிழில் கையெழுத்திட வேண்டும் என்னும் இவைகளை ஒருகாலும் வீண்கனவு என்று ஒதுக்கவே மாட்டேன். இது உனக்கே தெரியும் தமிழுக்கோ தமிழ்நாட்டுக்கோ பகைவனாக இருப்பவன் தான் இந்த நல்லஎண்ணங்களை வீண்கனவு என்று குறை கூறுவான் நம் தாயை நாம் வழிபட்டு, நம் குடும்பக் கடமையை நாம் ஆர்வத்தோடு செய்யும்போது இதை தவறு என்றும் குறுகிய நோக்கம் என்றும் ஒருவன் குறுக்கிடுவானனால் அவனைப் பகைவன் என்று ஒதுக்குவதே கடமையாகும்

> கொடுத்தும் கொள்ளல் வேண்டும் மன்ற அடுத்திருந்து
> மாணாத செய்வான் பகை

என்று நம் தலைவர் திருவள்ளுவர் ஆணையிட்டது ப் படிப்பட்ட பகைவர்களைக் கருதித்தான்

02 மொழியால் இனம் அமைவதும் நாகரிகம் அமைவதும் நாடு அமைவதும் நாட்டின் அமைப்புக்குத் துணையாக இருப்பதும் உலகம் அறிந்த உண்மைகள்.

03 அதிகாரிகள் தமிழில் எழுத வேண்டியதும் கனவு அல்ல காந்தியடிகளின் கருத்துப்படி மொழிவாரி மாகாணம் கட்டாயமாக ஏற்படும் போது ஆளுநர் தமிழில் கையெழுத்து இடுவதும் கனவு அல்ல, வங்காளத்திற்குத் தொண்டு செய்யச் சென்று முதுமையில் எழுபத்தெட்டாம் வயதில் அந்த நாட்டு மொழியில் கையெழுத்திட வேண்டும் என்று



வங்காளி எழுத்தைக் கற்றுக் கொண்ட காந்தியடிகளின் பெருந் தன்மையான நெறி அது

04 ஆகவே இன்று தமிழர்க்கு வேண்டியது அன்றாடக் கடமையைப்பற்றிய ஆராய்ச்சியே; மொழிப் பற்றையும், நாட்டுப்பற்றையும், செயலில் காட்டும் முறையே

05 தாகூரையும் காந்தியடிகளையும் விட உலக ஒற்றுமையை நாடியவர்கள் உண்டோ? அவர்களை விடத் தாய் மொழிப்பற்றுக் கொண்டவர்களும் இல்லை அல்லவா? இந்த அறிஞர்களை விட்டு நீங்காத மொழிப்பற்று தமிழரை மட்டும் விட்டு நீங்க வேண்டும் என்று சொல்வது தகுமா? சொன்னால் சொல்கிறவர்களின் மூளையில் நஞ்சு சுரந்து கிடக்கின்றது என்றே உணர வேண்டும்

60 தமிழ் ஒன்றே தமிழரைப் பிணைத்து, ஒற்றுமைப்படுத்த வல்லது தமிழ் ஆட்சிமொழியாகவும், கல்வி மொழியாகவுமானால் தவிர தமிழுக்கு எதிர்காலமில்லை என நம்பு ஆட்சிமொழி என்ற சட்டமன்றம் முதல் நீதிமன்றம் வரை தமிழ் வளங்கவேண்டும். கல்வி மொழியென்றால் எவ்வகை கல்லூரிகளிலும் எல்லாப் பாடங்களையும் தமிழிலே கற்பிக்கவேண்டும். குறைகள் பல இருக்கலாம். குறைகளுக்காக தயங்காமல் ஆட்சிமொழியாகவும் கல்வி மொழியாகவும் ஆக்க வேடுண்ம் என்று உணர்ந்திடு

07 இவ்வாறு பேசிக் கொண்டிருந்தால் போதாது உன்னால் ஆனவரையில் செய் கடிதம், பண விடைத்தாள், விளம்பரப் பலகை விற்பனைச் சீட்டு முதலிய எல்லாம் தமிழிலேயே எழுதுக (மராத்தியர் குயராத்தியர் முதலானவர்களிடம் இந்த வழக்கம் உள்ளது) இவற்றை தமிழில் எழுதினால் அஞ்சல்காரர்கள் வியாபாரிகள், வாங்கும் மக்கள் முதலியவர்களைத் தமிழ் படிக்கச் செய்வது போல் ஆகும் இல்லையானால் அவர்கள் தமிழை மறக்கும்படி செய்வது போல் ஆகும். நீ யாருடனும் தமிழிலேயே பேசு, (உலகத்தார் எல்லாரும் அவரவர் தாய் மொழியில் தான் பேசுகிறார்கள்) தமிழ் தெரியாதவர்களிடத்தில் மட்டுமே பிற மொழியில் பேசு திருமணம் வழிபாடு முதலியவற்றைத் தமிழில் நடத்து

08 வெளிநாட்டுத் துணியை விலக்குதல்போல் தமிழ்நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் நன்மை செய்யாத செய்தித் தாள்களை விலக்கு நாட்டுக்கும் மொழிக்கும் இடையூறான நிலையங்களைப் போற்றாதே. நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் உடையவர் நடத்தும் உணவு விடுதி மருந்துக்கடை துணிக்கடை முதலியன சிறிது தொலைவில் இருந்தாலும் விலை சிறிது கூடுதலாக இருந்தாலும் வேறு குறை இருந்தாலும் அங்கேயே சென்று வாங்கு. அவசரத்தின் காரணமாகவோ வேறு காரணத்தாலோ தவறு நேர்ந்திருந்தால் தவறு என்று உணர்ந்து வருந்து

ஓங்கிக் கிளைத்த செம்மொழிகளில் தமிழ் என்றென்றும் அழியாமல் இருக்கிறது சீசர் பேசிய சீர் லத்தினிலோ சோக்ரதீசு தத்துவம் வழங்கி மாக்கூரல் தந்த இரேக்கத்திலோ சகுந்தலம் மொழிந்த சமஸ்கிருதத்திலோ பொழுதெல்லாம் பேசிட அகழ்ந்தெடுத்தாலும் ஆட்கள் இல்லை. ஆரியம் போல் வழக்கழிந்தொழிந்து சிதையாமல் இருக்கும் எமது செம்மொழியை - இன்பத் தமிழை மாருதத் தமிழை பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு துறைதோறும் வளர்க்க வேண்டியது நமது தலையாய கடமையாகும் "தமிழனுக்கு வீழ்ச்சி இல்லை" என்று பாரதிதாசன் பாடியது உண்மையாக வேண்டுமானால் தமிழ் நாடு தமிழ் மக்கள். தமிழ் என்னும் பேருணர்ச்சியில் மூழ்கி மூழ்வது தவிர வேறு வழியில்லை தமிழால் வாழ்ந்தோர் பலர் தமிழுக்கென வாழ்ந்தோர் சிலர் தமிழ்த் தொண்டு மூலம் அனைத்தையும் தழுவி தமிழே தாமாகத்தாமே தமிழாகி வாழ்ந்து தமிழ்ச் சமுதாயம் தலை சிறந்து விளங்க, தமிழ் மொழி விடுதலைக்கு ஒரு தனி வழி கண்டு, அவரது உழைப்போம் எங்கும் எதிலும் தமிழை நடைமுறைப்படுத்துவோம் தமிழர் வாழ்வில் தமிழ் தழைத் தோங்கட்டும்.



## இக்கட்டுரைக்குப் பயன்பட்ட நூல்கள்


தமிழ் இலக்கிய வரலாறு - முனைவர் மு வரதராசன்

தமிழ் இலக்கிய வரலாறு - முனைவர் ச. பூவண்ணன்

'மணமலர்' - கி வ. ஜெகநாதன்
அமுத நிலையம், பிரைவேட் லிமிட்டட், தேனாம்பேட்டை

வான்புகழ் வள்ளுவர் - தி மாணிக்கவாசகம்
விசாலாட்சி பதிப்பகம், மதுரை.

'சைவ சமயம்' - முனைவர்
மா இராசமாணிக்கனார்

தியத் தமிழகம் - முனைவர்
மா இராசமாணிக்கனார்
சிறிமகள் கம்பனி, சென்னை.

சமய மறுமலர்ச்சி - தவத்திரு
குன்றக்குடி அடிகளார்

திருமணப் பாடல்கள் - முனைவர் மு. சண்முகசுந்தரம்

பாரதிதாசன் ஆய்வுக்கோவை - தொகுப்பாசிரியர், பேராசிரியர்
மு. சாய்பு மரைக்காயர்
கவிதை புத்தக நிலையம்

தமிழர் சமுதாயம் - கவிஞர் தமிழ் ஒளி
புதுமைப் பிரசுரம், பெண்ணாடம்

இந்தோனேசியாவில் இரண்டு-
வருட அனுபவம் ஆத்மசோதி நா. முத்தையா

ஐந்தாம் உலகத்தமிழ் - திரு இரா நெடுஞ்செழியன்
மாநாடு விழா மலர் பன்மொழிப் புலவர்
திரு கா. அப்பாத்துரை ஆகியோரின்
கட்டுரைகள்

பாவேந்தர் கனிவு - முனைவர்
தமிழ்க்குடிமகன்

''கொலை வாளினை எடடா மிகு

கொடியோர் செயலறவே

1941ல் இசையரசு தண்டபாணி தேசிகர் திருவையாறு இசை விழாவில் தெலுங்கு கீர்த்தனைகள் பாடிவிட்டு ஒரு தமிழ்ப் பாட்டுப்பாடலாயினர் ''பித்தா பிறை சூடி பெருமானே அருளாளா'' என்று சுந்தரர் தேவாரம் பாடினார் அடுத்த விநாடி ஒலி பெருக்கியை நிறுத்தி விட்டார்கள். இந்த நிகழ்ச்சியை கோள்வியுற்றுப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கொலை வாளினை எடடா எனப் போர்க்குரல் உயர்த்தினார்.

(பாரதி தாசன் ஆய்வுக் கோவை
- தொகுப்பாசிரியர் பேராசிரியர்

மு. சாய்பு மரைககார்)

திரு நாள்

''எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
தனையீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கும் என்றால்
செத்தொழியும் நாள் எனக்குத் திருநாளாம்.

பாவேந்தர் பாரதிதாசன்

# தமிழ் வளர்ச்சி

பேராசிரியர்

முனைவர் மா. இராசமாணிக்கம்

## தமிழின் பழமை

எமது தமிழ் மொழியாகிய தமிழ் எப்பொழுது தோன்றியது என்பதை அறுதியிட்டுக் கூறுதல் இயலாது அஃது ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே சிறந்த இலக்கண இலக்கியங்களைப் பெற்றிருந்தது. இந்த உண்மையை நோக்க, தமிழ் பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வந்த தனி மொழி எனலாம்.

## வடமொழிக் கலப்பு

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் வட இந்தியாவிலிருந்து வடமொழிவாணர் இந் நாட்டில் வந்து தங்கினர் அவர் தம் செயற்கையாலும் வடமொழி இலக்கண இலக்கியங்களாலும் தமிழ் இலக்கியத்தில் வட மொழிக் கலப்பு ஏற்படத் தொடங்கியது பின்னர் நாளடைவில் வடவர் சமயமும் தமிழர் சமயமும் கலப்புண்டன இக் கலப்பின் பயனாக வைதீக சைவ நெறியும் வைதீக வைணவ நெறியும் தமிழகத்தில் தோன்றி வளர்ந்தன அப்பொழுதுதான் நாயன்மார் பாடல்களும் ஆழ்வார் அருட் பாடல்களும் வெளிப்பட்டன. சங்க காலத்தில் ஏற்பட்டதை விட தோத்திர நூல்களில் வட மொழிக் கலப்பு மிகுதிப்பட்டது. பின்பு அமைந்த சோழப் பேரரசர் காலத்தில் (கி. பி. 900 - 1300) பாதி தமிழ்- பாதி வடமொழி அமைந்த மணிப் பிரவாள நடை தமிழில் தோன்றியது. வட மொழி மந்திரங்கள் புராணங்கள் முதலியன தமிழ் நாட்டில் பெருகின. தமிழ்ப் புலவர்கள் வட மொழிப் புராணங்களை மொழி பெயர்த்தனர் இதனால் வடமொழியில் இருந்த சமயச்சொற்கள் தமிழில் புகுந்தன

## வட மொழி ஆட்சி

இக் காலத்திற்றான் வட மொழி வல்லுநர்களான சைவ ஆசிரியர்களும் சைவ குருக்களும் சமய அதிபதிகளாக விளங்கினர். சோழர்களுக்கு இராச குருக்களாக அமைந்தவர்களும் வடமொழிவாணர்களே இவர்கள் சமயத் துறையில் அரசின் ஆணையையும் மாற்றவல்ல உயர் நிலையில் இருந்தனர், மூன்றாம் குலோத்துங்க சோழன் செய்த முடிவினை அவனது அரச குரு சுவாமிதேவர் மாற்றிவிட்டார் என்பதை கல்வெட்டு குறிக்கின்றது தேவார காலத்தில் தமிழ்ப்பெயர் பெற்றிருந்த ஒவ்வொரு சிவத்தலமும் நாளடைவில் வடமொழிப் பெயர் பெற்று விட்டது தேவார காலத்தில் 'திருமுதுகுன்றம் என்று வழங்கப்பட்ட ஊர் பிற்காலத்தில் 'விருத்தாசலம்' எனவும் 'மறைக்காடு' என்பது 'வேதாரண்யம்' எனவும் 'வெங்காடு' என்பது 'சுவேதாரண்யம்' எனவும் மாறி வழங்கலாயின இவ்வாறே சுவாமி பெயர்களும் அம்மன் பெயர்களும் வடமொழியில் ஆக்கப்பட்டன

'ஐயாறனார்' என்பது திருவையாற்றுச் சிவன் பெயர் இப்பெயர் 'பஞ்சநதீவரர்' எனவும் மதுரை அங்கயற்கண்ணி என்பது மீனாட்சி எனவும், சொக்கர் என்பது சுந்தரேசுவரர் எனவும் மாறின. ஐயாறப்பனது அம்மன் பெயர் தர்மசம்வர்தனி என மாற்றப்பட்டது. இவ்வாறு ஒவ்வொரு தலத்திலுமுள்ள சுவாமி, அம்மன் பெயர்கள் தமிழ் மக்களுக்கு புரியாத வடமொழிப் பெயர்களால் வழங்கப்பட்டன தேவார காலத்திலேயே இம்முறை கையாளப்பட்ட போதிலும் பிற்பட்ட சோழர் காலத்தில் இது பெரு வழக்கும் பெற்றது இக் காலத்தில் கட்சி வெறிகொண்ட சிலர் தம் தாய் மொழி வளர்ச்சியிலும் பாதுகாப்பிலும் கவலை கொள்ளாதிருத்தல் போலவே மத வெறி கொண்ட அக் காலத்தில் தமிழர் தமிழுக்கு இனம் படிப்படியாக நேர்ந்து வந்த கேட்டினை உணராதொழிந்தனர். இங்ஙனம் சமயப் போர்வையில் வட மொழியின் செல்வாக்குப் பெருகியது அது பெருகப் பெருகத் தமிழ் செல்வாக்கிற் படிப்படியாக சுருங்கத் தொடங்கியது

## பிறமொழிக் கலப்பு

சோழராட்சிக்குப் பிறகு மைசூர்ப்பகுதியை ஆண்ட ஹொய்சலர் ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்டது. அதனால் கன்னடர் தமிழகத்தில் பரவினர். பின்பு முசுலிம்கள் தென்னாட்டை ஆண்டனர். விசய நகர வேந்தர்கள் ஆண்டனர் இவர் தம் கூட்டுறவால் உருது, இந்துத்தானி, பாரசிக, அராபியச் சொற்களும் தெலுங்கு, கன்னடச் சொற்களும் தமிழிற் புகுந்தன.

ஜமீன், பொரிகை, சிப்பந்தி, சிப்பாய், சுமார், பந்தோபஸ்து தாண்தாவேஜ், பக்கிரி, மேஜை ரஸ்தா என்பன பாரசீகச் சொற்கள்,

ஆசாமி, அநாமத், இலாகா, கஜானா காடிகானா காய்தா, ஜப்தி, மாமூல், சகுல், முனிசிப் என்பன அராபியச் சொற்கள்.

அசல், அந்தஸ்தி, அபின், அல்வா, அம்பாரி, ஆஜர் இஸ்திரி, உஷார், குமாஸ்தா, குல்லா, ஜாஸ்க்காளம், ஜாப்தா ஜாஸ்தி பஞ்சாயத்து என்பன இந்துஸ்தானி சொற்கள்.

முகலாயர் ஆட்சிக் காலத்தில் தென்னாட்டில் வாணிகம் செய்ய வந்த போர்த்துக்கீசியர் கூட்டுறவால் கிராம்பு சன்னல், சாவி, அலுமாரி, பாதிரி என்பன தமிழில் கலந்தன இவ்வாறு காலப் போக்கில் பற்பல நாட்டவர் கூட்டுறவால் அவ்வவர் மொழிச் சொற்கள் தமிழிற் புகுந்தன, இவை அனைத்தும் தமிழ் நூல்களிற் புகுந்து தமிழ்ச் சொற்கள் வழங்கி வந்த இடங்களைக் கைப்பற்றிய பெருமை வடமொழிக்கே உரியது.

## கேடுகள்

மகிழ்ச்சி என்பது தமிழ்ச் சொல். தமிழன் அதைச் சொல்வதற்குப் பதிலாகச் சந்தோசம் என்ற வட சொல்லைப் பயன்படுத்துகிறான். இச்சொல்லையே தொடர்ந்து அவன் பயன்படுத்துவானாயின், நாளடைவில் மகிழ்ச்சி என்னும் தமிழ்ச் சொல் வழக்கொழிந்துவிடும் அல்லவா? இவ்வாறு வழக்கொழிந்த தமிழ்ச்சொற்கள் பலவாகும் நம் நாட்டில் செய்யப்படும் ஆடைகளைப் பயன்படுத்தாமல் பிறநாட்டு ஆடைகளைப் பயன்படுத்துவதால், நம் நாட்டு நெசவுத் தொழில் நாளடைவில் நசிந்து விடும். அது போலவே, நமது தாய்மொழிச் சொற்களை விட்டுவிட்டுப் பிற மொழிச் சொற்களை நாம் வழங்கி வருவோமாயின், தமிழ்ச் சொற்கள் நாளடைவில் வழக்கு ஒழிந்து விடும். அதனால் தமிழ்மொழி வலிமை குன்றும்.



## பாதுகாக்க வழிகள்

ஒரு பொருளை உணர்த்தத் தமிழில் சொல் இல்லாத பொழுதுதான் வேறொரு சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்ற திடமான கொள்கை தமிழரிடம் இருத்தல் வேண்டும். தமிழ் மக்கள் தமிழ்ப் பெயர்களையே தங்கள் குழந்தைகளுக்கு இட்டு வழங்குதல் வேண்டும்.

சங்க நூல்களிற் காணப்படுகின்ற இளங்கோ, நெடுஞ்செழியன் பெருவழுதி, இளம் வழுதி முதலிய தூய தமிழ்ப் பெயர்கள் தமிழ்ப் பிள்ளைகளுக்கு இட்டு வழங்குதல் ஆகாதோ? 'இப் பெயர்கள் வழக்கிழந்து விட்டனவே' என்று இருபது ஆண்டுகட்கு முன் கவலைப்பட்ட தமிழறிஞர்கள் உள்ளம் குளிர தமிழ் தழைக்க, இன்று இப்பண்டைப் பெயர்களை நற்றமிழர் சிலர் வழக்கில் கொண்டு வந்துள்ளமை பாராட்டற்பாலது அந் நன் மக்கள் தமிழன்னையின் திருவருளால் சிறந்து வாழ்வார்களாக அவர்களைப் பின்பற்றி பலரும் தமிழ்ப் பெயர்களைத் தங்கள் பிள்ளைகளுக்கு இட்டு வழங்கும் நாளே தமிழ் வளர்ச்சிக்குரிய நன்னாள் ஆகும்.

புதிய தெருக்களும் புதிய நகரங்களும் தமிழ்ப் பெயர்களால் வழக்குப் பெறுதல் வேண்டும். கடைகளை உணர்த்தும் விளம்பரப் பலகைகள் தமிழ்ச் சொற்களைத் தாங்கியிருத்தல் வேண்டும். 'ரைஸ் மில்' என்று தமிழில் எழுதப்படாமல் அரிசி அரைக்கும் இடம்' என்று எழுதப்படல் வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு கடையின் விளம்பரப் பலகையும் நற்றமிழில் எழுதப்படுமாயின் நற்றமிழ்ச் சொற்கள் பொதுமக்கள் பேச்சில் வழக்குப் பெற்றுவிடும்.

போக்கு வரவு சாதனங்களான புகைவண்டி முதலியவற்றில் காணப்படும் அறிவிப்புக்களும் புகைவண்டி நிலையங்களில் உள்ள அறிவிப்புக்களும் பிழையற்ற தமிழில் எழுதப்படல் வேண்டும். புகைவண்டி நிலையங்களில் மக்கள் ஒதுங்குமிடங்களில் ''ஸ்திரீகள்' புருஷர்கள் எழுதப்பட்டிருத்தல் 'பெண்கள்', 'ஆண்கள்' என்று மாற்றப்படுதல் வேண்டும். படக்காட்சி நடைபெறும் இடங்களில் எல்லாம் தமிழறிந்த புலவர்கள் அமர்த்தப் பெற்று கதையும் உரைநடையும் பாடல்களும் பிழையற்ற எளிய தமிழில் ஆக்கப்படல் வேண்டும் ஒவ்வொரு

அச்சகத்திலும் தமிழ்ப் புலவர்கள் இருந்து எளிய தூய தமிழ் நடையில் விளம்பரத் தாள்கள் நூல்கள் முதலியன அச்சிட்டு வெளிவரும் படி கவனித்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும் செய்தித் தாள்கள் எளிய இனிய தூய தமிழ் நடையில் வெளியிடப்படுதல் வரவேற்கத்தக்கது

## சமயத் துறையில் தமிழ்

தமிழர் வரிப்பணத்தாலும் தமிழர் வள்ளன்மையாலும் கட்டப்பட்ட தமிழகத்துக் கோயில்களில் தமிழில் வழிபாடுகள் நடைபெறுவதில்லை. இதனால் சமுதாயத்தில் சமய உணர்ச்சி குறைகிறது. இந்த உண்மையை உணர்ந்து ஒவ்வொரு கோவிலிலும் தமிழில் வழிபாடு நடைபெறச் செய்தல் வேண்டும் கோவிலிலுள்ள ஒவ்வொரு மூர்த்தத்திற்கும் மேலுள்ள சுவரில் எழுதப்பட்டுள்ள அதன் பெயர் நல்ல தமிழில் மாற்றி எழுதப்படல் வேண்டும். தஷிணாமூர்த்தி என்னும் பெயர் தென் முகக் கடவுள் என மாற்றி அமைக்கப்படல் வேண்டும் காலத்திற்கேற்றவாறு உள்ளத்தை உருக்கும் சமயப் பாடல்களை மட்டும் தொகுத்து அவற்றை ஓதுவார்களைக் கொண்டு பாடுவித்தல் வேண்டும். சமயச் சொற்பொழிவுகள் எல்லாப் பொது மக்களுக்கும் புரியும் படி தமிழ்ச் சொற்களைக் கொண்டே ஆற்றப்படுதல் வேண்டும் சமய நூற் கருத்துகளை எளிய தமிழ் நடையில் அனைவரும் படித்துணரத்தகும் முறையில் வெளியிடுதல் வேண்டும்

## வாழ்வில் தமிழ்

மனித வாழ்வில் மிகவும் சிறப்பான நிகழ்ச்சி திருமணமாகும். பலர் அறியச் செய்யும் திருமணத்தில் கணவன் மனைவியின் கடமைகளை அவ்விருவரும் உணரும்படி செய்தல் மரபு தமிழன் திருமணத்தில் இவை உணர்த்தப்பட வேண்டுமாயின் மண நிகழ்ச்சிகள் தமிழிலேயே நடைபெறுதல் வேண்டும். தமிழர்க்குப் புரியாத வேற்று மொழியில் மணவினை நிகழுமாயின் அதனால் மணமக்கள் பெறும் பயன் யாது? இவ்வாறு மணவினை முதல் வாழ்வில் நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளிலும் தமிழே ஆட்சி புரிதல் வேண்டும்



ஒரு தமிழன் மற்றொரு தமிழனைக் காணுங்கால் தன் தாய் மொழியிலேயே பேசுதல் வேண்டுமென்ற உறுதிப்பாடு ஒவ்வொரு தமிழனுக்கும் இருத்தல் வேண்டும். ஆந்திரரிடமும் வங்காளியரிடமும் இவ்வுறுதிப்பாடு இருந்து வருகிறது ஆயின், தமிழில் பேசுதல் சிறப்புத் தராது என்று கருதும் கீழ் மகனாக ஆங்கிலம் கற்ற தமிழன் இருந்து வருகிறான் இந்த இழிநிலை நம்மிடமிருந்து மறைதல் வேண்டும்.

இதுகாறும் கூறப்பெற்ற வழிவகைகளை உணர்ந்து, உள்ளத்தில் அமைத்து, பழக்கத்தில் கொண்டு வரின், ஏறத்தாழப் பத்தாண்டுக்குள் தமிழ் மொழி தமிழகத்தில் வேரூன்றி வளரும். தமிழ் வளர்ந்தால் தான் தமிழன் வளர்வான். தமிழன் வளர்ந்து வந்தால் தான் தமிழ்நாடு வாழ்தல் கூடும். தமிழன் என்ன செய்யப் போகிறான்?

(நன்றி - தமிழ்மொழிச் செல்வம் நூல்)

## தமிழிற் கலைச்சொற்கள்

"நமது தாய் மொழி பழமையும் சிறப்பும் பொருந்தியது அதனில் எல்லாக் கலைச் சொற்களையும் ஆக்க வசதியுண்டு அறிஞர் அவசரப்படாமல் நன்கு ஆராய்ந்து கலைச்சொற்களை அமைக்க வேண்டும்: தமிழில் வெளிவரும் கலைச்சொற்கள் எளிதிற் புரிவதில்லை என்று கூறுவது தவறு. இன்று புரியாத ஒன்று நாளை புரியும். பழகப் பழக எல்லாச் சொற்களும் எளியவையாகிவிடும். ஆதலின் அறிஞர் முயன்று தமிழிற் கலைச் சொற்கள் ஆக்குதல் நல்ல முயற்சியாகும்"

விபுலாநந்த அடிகள்

# தமிழ் இசை

'பாரதியாருக்குப் பிறகு பாரதிதாசன் ஆவேசமாகச் சொன்னார்
'செந்தமிழில் இசைப்பாடல் இல்லையெனச் செப்புகின்றீர்
மானமின்றி
நம் தமிழில் இசையில்லை நாம் தாய்க்கே உடையில்லை
என்பதுண்டோ?''

பாரதிதாசன்

உள்ளத்து உணர்ச்சிகளைத் தொட்டு மனத்தை ஒருமுகப்படுத்த வேண்டுமென்றால் இசையோடு பொருளும் கலக்க வேண்டும். மேல்நாட்டுச் சங்கீதம் கணக்கிலிருந்து பிறந்த ஒன்று நம்முடைய தமிழ் இசையோ உணர்ச்சியிலிருந்து பிறந்த ஒன்று

''ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாப் பூத்தாளை'' என்று நம் தமிழ்ப்பாடகர் இசையோடு இந்தச் சொல்லையும் குழைத்துத் தருவாரேயானால், எந்த மனம் ஈர்க்க மறுக்கும்? இதையே வேறு மொழியில் கூற முற்பட்டால் மனம் லயிக்குமா?

நீதிபதி. ச. கோகுலகிருட்ணன்

''தமிழ்ப்பாட்டுக்கள் பாட வேண்டும், என்கின்ற கட்சியை சேர்ந்த பாமரர்களில் நானும் ஒருவன். கண்ணை மூடிக்கொண்டு கூட்டத்தில் பெரும் பான்மையோருக்குப் புரியாத பாசைகளில் பாடித்தள்ளுவது சங்கீத வளர்ச்சிக்கு உதவாது என்று தான் நான் சொல்கிறேன்.

இராசாசி



மொழியும் பொருளும் இருந்தால் தான் மானிடக் குரல் இசையாகும் இல்லாவிடில் வெறும் ஓசைதான். கேட்போரின் இன்பத்திற்கும், உணர்ச்சிப் பெருக்கிற்கும் தாய்ப் பாசை இன்றியமையாதது. இந்தத் தாய்மொழிக் கிளர்ச்சியானது இசையில் மாத்திரம் அல்ல. எல்லாத்துறைகளிலுமே ஓங்கி வளர வேண்டும்.

என் தாய் என்னைத் தொட்டிலிலிட்டு தாலாட்ட எடுத்த குரல் தமிழ்க்குரல் என் மூதாதையர் இறைவனைத் துதிக்க எழுப்பிய இசை தமிழ் இசை என் ஆசான் எடுத்து அடிவைக்கக் கொடுத்த பாடம் தமிழ்ப்பாடம் அந்தத் தமிழுக்கு நான் செய்யும் நன்றிக்கடன் அதனை ஒதுக்குவதா? என் தாயை நான் வெறுப்பதா? இறைவனுக்கு உகந்த மொழியென்று ஆழ்வார்களும் நாயன்மார்களும் விளக்கிய பிறகு. அரசவையில் வீற்றிருந்த மொழியென்று சரித்திரம் பறை சாற்றிய பிறகு, இசைக்கு உகந்தமொழியென்று இலக்கியங்கள் கூறியபிறகு இதை மறுக்கும் எவர்க்கும் நாம் செவி சாய்க்க வேண்டுமா?

மூதறிஞர் இராசாசி

''தமிழ் நாட்டில் உள்ளவைபோன்ற சிற்பக் கலையின் சிகரமான ஆலயங்கள் உலகில் வேறு எங்கும் இல்லை, தமிழ் நாட்டில் வழங்கும் சங்கீதத்தைப் போன்ற சங்கீதம் ஒன்று உலகில் வேறு எங்கேயும் கிடையாது''

கல்கி

''எனக்குத் தமிழ் தான் மற்றைய எந்தப் பாசையைக் காட்டிலும் இனிய பாசையாகவும், சங்கீதத்திற்கு றொம்பவும் இசைந்ததாகவும் தோன்றுகிறது. தமிழ் சங்கீதத்திற்கு ஏற்ற பாசைதானா என்று சந்தேகப்படுகின்றவர்கள், முதலில் கொஞ்சம் தமிழ் படிக்கட்டும்; முக்கியமாகக் கம்பனையும், பாரதியையும், தேவார திருவாசகங்களையும் திருவாய் மொழியையும் அருட்பாவையும் படிக்கட்டும் பிறகு சொல்லட்டும்''

கல்கி

## செந்தமிழ் ஆட்சி

மன்பதையெல் லாந்தமிழராய் வாழ வேண்டும்,
    மல்குபெயர் செந்தமிழாய் மலர வேண்டும்,
அன்பகமாய்த் தமிழகம் தமிழணிந்து,
    அங்காடித் தெருப்பெயர்கள் தமிழேயாகி,
இன்ப நிழற் பூஞ்சோலை கல்விச் சாலை
    இயலிசைநா டகமேடை கோயிலெல்லாம்
செந்தமிழே நடம்புரியத் தமிழராட்சி
    செந்தமிழின் ஆட்சியெனத் திகழ்வதென்றோ?

—புத்தமணி—



# தமிழனைத் தேடுகின்றேன்

கவிஞன் காசி ஆனந்தன்

மொழியால் தமிழனைத் தேடினேன் - அவன் ஆங்கிலத்தை கொஞ்சிக்கொண்டிருந்தான்.

பண்பாட்டால் தமிழனைத் தேடினேன் - அவன் 'பர்த் டே' பாட்டியில் கேக் வெட்டிக் கொண்டிருந்தான்.

நாட்டில் தமிழனைத் தேடினேன் - அவன் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் - ஆத்திரேலியாவிலும் ஏதிலியாய் நின்று கொண்டிருந்தான்.

இனத்தால் தமிழனைத் தேடினேன் - அவனைக் காண வில்லை. தமிழன் அழிந்துபோனான்!

அன்று —

பண்டைக் கிரேக்க - ஐரோப்பிய - இலத்தீன நாகரிகம் அனைத்துக்கும் மூலமான பாபிலோனியாவில் வாழ்ந்தவன் தமிழன் தானாம் அந்த மண்ணிலுள்ள 'ஊர்' என்ற சொல் பச்சைத் தமிழ்ச் சொல்லாம் - பாவாணர் கூறுகிறார்.

இசுப்பெயின் நாட்டில் இன்று விடுதலை கோரிப் போராடி வரும் பாசுக்கு (Basque) மக்கள் குமரியில் இருந்து போன பழைய தமிழனின் வழித்தோன்றல்கள் தானாம். பாசுக்கு மொழி தமிழுக்கு மிகவும் நெருக்கமானதாம். ஆய்வாளர் இலா கோவாரி (Dr. N Lahovary) சொல்கிறார்.

ஆபிரிக்கா பண்டைத் தமிழனின் நாடுதானாம். ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்ச் சொற்கள் அங்குண்டாம் - செனகல் நாட்டுத் தமிழறிஞர் செங்கோர் முழங்குகிறார்,

எடின்பரோ (Edinborough) கன்ரர்பரி (Canterbury) ஆகிய ஊர்ப் பெயர்களில் உள்ள 'புரி' தமிழ்ச் சொல் தானாம். சின்ன மனிதர்கள் வாழ்ந்ததால்தான் சீனா என்று ஆயிற்றாம் அரிசி என்ற தமிழ்ச் சொல்லில் பிறந்தது தானாம. ஒரிசா- இன்னொரு பேராசிரியர் அடுக்கிக் கொண்டே போகிறார்.

சரி.

அங்கெல்லாம் வாழ்ந்த தமிழன் எங்கே தான் போய்த் தொலைந்தான்? சொல்லுங்கள்!

காணவில்லை!

சிந்துவெளியில் தமிழன் வாழ்ந்தான் என்கிறீர்கள். அவன் பயன்படுத்திய சட்டி இருக்கிறது. - பானை இருக்கிறது - செம்பினால் செய்த ஊசி கூட இருக்கிறது தமிழனை மட்டும் காணவில்லை.



தமிழன் அடையாளம் இழந்தது எப்படி? மொழியாலும் பண்பாலும் நடையாலும் பிறழ்ந்தது எப்படி?

தமிழன் தன்னைத்தானே மறந்தான்! தன்னைத் தானே தாழ்த்தினான்! தன்னைத்தானே பிரித்தான்! தன்னைத்தானே காட்டிக் கொடுத்தான்! தன்னைத்தானே அழித்தான்!

இதுதான் வரலாறு.

பைந்தமிழ் ஈழத்தில் மீன்பாடும் தேன்நாடாம் மட்டு நகரில் 500 ஆண்டுக்கு முன்பு வந்து குடியமர்ந்த பறங்கியர்கள் (போர்த்துக்கீசர்) வாழ்கிறார்கள் இன்றும் வீடுகளில் தங்கள் தாய்மொழியாம் போர்த்துக்கீய மொழியிலேயே இவர்கள் உரையாடுகிறார்கள்,

ஆனால் -

150 ஆண்டுகளுக்கு முன்பு 'மொரிசியஸ்' தீவுக்குப் போன தமிழன் தன் தாய்மொழியை, தமிழை முற்றிலுமாக மறந்து போனான், மொரிசியஸ் தீவில் தமிழன் கிரியோல் மொழிக்காரனாய் முகமிழந்து நின்றான்.

வெள்ளைக்காரனுக்கு அடிமையாக இருந்தது - அவனுக்குத் தொழும்பு செய்த காலத்தில் அவனைப்பார்த்து 'சார்' போட்ட தமிழன், இன்னும் 'சார்' போடும் வெட்கங்கெட்ட பழக்கத்தை விட்டெறிந்ததாகத் தெரியவில்லை.

ஆங்கிலம் பேசுவது நாகரிகம் என்றும் - தமிழ் பேசுவது பட்டிக்காட்டுத் தன்மை என்றும் தன்னையும் தன் மொழியையும் தாழ்வாக இவன் கருதும் பாங்கினை - தீங்கினை யாரிடம் சொல்லி அழுவது?

தன்னைத் தாழ்வானவன் என்றும் அடுத்தவனை உயர்வானவன் என்றும் கருதி-அடுத்தவன் மொழியை, பண்பாட்டை ஏற்று தமிழன் அழிந்தான்
இழிந்த இனம்!

அழிந்த தமிழினம் இன்று உலகில் இழிந்த தமிழினமாய் திரிகிறது!

தொல்காப்பியம் கி மு 500 இல் எழுதப்பட்டது. தமிழ் முளைத்து - பூத்து - கனிந்த, பின்பு தோன்றிய தமிழ் இலக்கணம், தொல்காப்பியம்

ஆயிரம் ஆண்டுகளின் பின்பு கி, பி 500 இல் ஆங்கிலமும் சிங்களமும் தோன்றின ஆனால் -

ஆங்கிலேயனுக்கும் சிங்களவனுக்கும் இன்று அரசுகள் உண்டு.

தமிழனுக்கு?

# பிழைதிருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 9 | 10 | துறையில்தான் | துறையில் |
| 15 | 24 | படைத்தன் | படைத்தனன் |
| 16<br>17 | 7<br>13 | சந்தணம் | சந்தனம் |
| 17 | 15 | மைத்துணன் | மைத்துனன் |
| 17 | 18 | சக்கரை | சருக்கரை |
| 27 | 23 | நல்லானொடும் | நல்லாளொடும் |
| 28 | 16 | ஒருவம் | ஒருவரும் |
| 28 | 19 | மணிகலம் | மணிகளம் |
| 28 | 27 | அகத்தியன் | அகத்தியற் |
| 32 | 5 | மூகியவரின் | முதியவரின் |
| 32 | 13 | பேய்கவாம் | பேய்களாம் |
| 41 | 6 | தியு தமிழகம் | புதிய தமிழகம் |
| 49 | 8 | வழீ | வழி |
| 55 | 6 | ஆண்டுக்கு | ஆண்டுகளுக்கு |

# தொகுப்பாசிரியர் பற்றி...

வட்டுக்கோட்டை சிந்துபுரத்தைப் பிறப்பிடமாகவும், கிளி நொச்சி கனகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வே. பரம நாதபிள்ளை ஆகிய இவர் கிளிநொச்சி அரச செயலகத்தில் நிர் வாக உதவியாளராகப் பணிபுரிந்தவர்.

தமிழ் மீது தணியாத தாகம் கொண்ட இவர் 1966ல் தனது திருமணத்தைத் தமிழ்த்தாய் மணிக்கொடி ஏற்றியும் திருக்குறள் ஓதியும் நடாத்திக் காட்டியவர், அத்துடன் இன்றுவரை இவர் குடும்பத்தின் எல்லா நிகழ்வுகளும் தமிழிலேயே நடைபெறுகின் றன,

தமிழ் வளர்ச்சி கருதி கிளிநொச்சித் தமிழ்ச் சங்கத்தை நிறுவ உழைத்தவர், இன்றுவரை அதன் செயலாளராகப் பணி யாற்றி வருகிறார் எங்கும் எதிலும் தமிழ் வளரவேண்டும் என்ற வேட்கையால் தான் கற்றதை மற்றவர்களும் அறிய வேண் டும் என்ற நோக்கில் தமிழறிஞர்கள் பலரின் கருத்துக்களைத் தொகுத்து "*தமிழர் வாழ்வில் தமிழ்*" என்னும் தொகுப்பை கிளி- தமிழ்ச்சங்கத்தின் வெளியீடாகத் தந்துள்ளார்.

அரிய கருத்துக்களைக் கொண்டுள்ள இந்நூல் தமிழர் ஒவ்வொருவரும் படிக்கவேண்டியது மேன்மேலும் இது போன்ற நூல்கள் வெளிவரவேண்டும். அதற்கு இவரின் பணி தொடர வாழ்த்துகிறேன்

தி. இராசநாயகம்
அரச அதிபர்

*அச்சுப்பதிப்பு:-* சி. க. கூ. சங்க சமாச